Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 107 | சனிக்கிழமை | மாசி 29 ஆம் நாள் 13 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# தமிழர்களுக்கு நீதிகோரி 17 அன்று யாழில் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை பெரும் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு வலுச்சேர்க்க வேண்டும் என்று வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 19

## திடீர் தலைச்சுற்று: ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

தலைச் சுற்றல் காணப்பட்டதை அடுத்து மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டவர், மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் 19

## மோ.சைக்கிள் மோதி குடும்பஸ்தர் இறப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். பூநகரி, 4ஆம் கட்டையைச் சேர்ந்த செல்ல 19

## சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

சைக்கிளில் இருந்து விழுந்து மயக்கமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மணகும்பான், நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசாமி பன்னீர்செல்வம் (வயது-65) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 2ஆம் திகதி 19

## வலிப்பு நோயால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வலிப்பு நோய் காரணமாக செட்டிக்குளம் பிரதேச சபை சிற்றூழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மெனிக்பாமைச் சேர்ந்த புவனேஸ்வரன் (வயது-36) என்பவரே உயிரிழந்துள்ளார். 19

## கனதியாகவே இருக்கிறது ஐ.நா. சபையின் அறிக்கை!

சம்பந்தன் சான்றிதழ்



யாழ்ப்பாணம், மார்ச் 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு கனதியாகவே உள்ளது. இதை விமர்சிப்பவர்கள் விமர்சிக்கட்டும். 19

## அபாய கட்டத்தில் யாழ். மாவட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த மாதத்தின் முதல் 11 நாள்களில் 101 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எதிர்வரும் நாள்களில் வைரஸ் தொற்று நிலைமை தீவிரமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையி



லேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 19

## யாழ். - சென்னையிடையே விரைவில் விமான சேவை!

மன்னார், மார்ச் 13

கொரோனாவைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்ட யாழ்ப்பாணம் - சென்னை நேரடி விமானசேவை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று சுற்றுலாத்துறை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 07

## நிலாவெளி கடலில் மூழ்கி யாழ். மாணவர்கள் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

திருகோணமலை நிலாவெளிக் கடலில் மூழ்கி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் பாதிப்படைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 07

## வடக்கு மாகாணத்தில் 12 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணத்தில் நேற்று 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், யாழ்ப்பா 19

## வவுனியாவில் அறுவருக்கு தொற்று உறுதி

வவுனியா, மார்ச் 13

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்கள் 6 பேருக்கு நேற்றும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தத் தொழிற் 07

## சுப்பர்மடத்தில் வீடு புகுந்து வன்முறை கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் உள்ள வீடொன்றுக்குள் ஆள்களற்ற நேரம் நுழைந்த கும்பல் ஒன்று 19

## சங்கானையில் மருத்துவர்: யாழ். நகரத்தில் மாணவர்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் நேற்று 7 பேருக்குக் கொரோனாத் தொற்றுக் கண்டறியப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த மருத்துவர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 07

## தென்னாபிரிக்கத் திரிபு இலங்கைக்கு வந்தது!

கொழும்பு, மார்ச் 13

தென்னாபிரிக்காவில் வேகமாகப் பரவி வரும் கோவிட் 19 வைரஸின் புதிய திரிபு இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, தொற்றுநோய் 07

## ரயிலுடன் மோதி ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சியில் ரயிலுடன் மோதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் நட 19

### போராடுவதற்காக அமைத்திருந்த

# உறவுகளின் கூடாரத்தைஅள்ளிச்சென்ற பொலிஸ்!

**மட்டக்களப்பு, மார்ச் 13**

**சர்வதேசத்திடம் நீதிகோரி சுழற்சி முறையில் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்று அதிகாலை போராட்டம் நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரமும் அங்கிருந்த பதாகைகள் உட்பட பல பொருள்களையும் பொலிஸார் அள்ளிச் சென்றுள்ளனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது. எனினும், கடும் வெயிலுக்கு மத்தியிலும் கறுப்பு குடைகளை பிடித்தவாறு போராட்டம் தொடர்ந்து நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.**




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் 10ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தைத் தொடர்ந்த நிலையில், பொலிஸார் இத்தகைய செயலில் ஈடுபட்டனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது. தாங்களே கூடாரத்தை அகற்றியதோடு பொருள்களையும் எடுத்தோம் என்று பொலிஸார் கூறினர் என்று, அருட்தந்தை க.ஜெகதாஸ் தெரிவித்தார்.

நீதிமன்ற கட்டளைக்கு அமைவாகவே கூடாரங்களை அகற்றினோம் என்று குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார். எனினும் நீதிமன்றக் கட்டளை தொடர்பில் எந்தவித அறிவிப்புகளோ, முன்னறிவித்தலோ எமக்கு வழங்கப்படாமல், ஒருதலைப்பட்சமாக கூடாரம் அகற்றப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், தாங்கள் இந்தப் பகுதியில் போராட்டம் நடத்துவதற்கு எதிரான முழுமையான தடையுத்தரவைப் பெற்றுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தபோதிலும், அந்த தடையுத்தரவைப் பொலிஸார் இதுவரையில் எங்களுக்கு காட்டவில்லையெனவும் அவர் தெரிவித்தார். பொலிஸாரின் இத்தகைய செயல்கள் தொடர்பில் அதே பொலிஸ் நிலையத்திலேயே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 11 வருடங்களாக நாங்கள் பலவித போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையிலும், பல்வேறு அச்சுறுத்தல்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுக்கப்பட்டுவரும் நிலையில் நாங்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (த-150)

## பதவி விலகும் அறிவிப்பை மீளப்பெற்றார் தவிசாளர்

வவுனியா, மார்ச் 13

கூட்டமைப்பு வசம் உள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராயசிங்கம் (ரவி), தனது பதவி விலகல் தீர்மானத்தை மீளப்பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தமுறை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

அதற்கமைய சபையின் தவிசாளர் பதவியை ஆட்சிக் காலப்பகுதியில் இரண்டரை வருடங்கள் என பங்கிட்டு வகிப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் மற்றும் ரெலோ கட்சிகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கமைய தவிசாளர் பதவியை புளொட்டுக்கு வழங்கும் நோக்குடன் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் நடராயசிங்கம், தனது பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புளொட்டைச் சேர்ந்த தவிசாளர், இதுவரையில் பதவி விலகல் முடிவை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் நடராயசிங்கம், பதவி விலகும் அறிவிப்பை மீளப்பெற்று அது தொடர்பான கடிதத்தை பிரதேச சபையின் செயலாளருக்கு நேற்று அனுப்பியுள்ளார். - என்று தெரிவிக்கப்பட்டது. (த110)

### பாலியல் தொழிலுக்கு

## பெண்களை விற்பனைசெய்த இலங்கைப் பெண் மறியலில்



கொழும்பு, மார்ச் 13

ஓமானில் வேலை வாய்ப்புக்காக அனுப்புகின்றேன் என்று கூறி, பெண்களை ஏமாற்றி, பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில், பெண் ஒருவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸார் இணைந்து கைதுசெய்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று, அங்கு துன்புறுத்தல்களை எதிர்கொண்ட பின்னர் பெப்ரவரி மாதத்தில் நாட்டுக்குத் திரும்பிய பெண்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே மஹியங்கனையில் வசிக்கும் அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

அவரும், அவருடன் இணைந்து செயற்படும் மற்றொரு குழுவும் இணைந்து மனித கடத்தல் வலையமைப்பை நடத்தி 22 முதல் 27 வயதுக்கு உட்பட்ட பெண்களை ஓமானுக்கு அனுப்பி சுல்தான்களுக்கு விற்றனர் என்றும் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய மோசடிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. சந்தேகநபர் பெப்ரவரி 25ஆம் திகதி ஓமானில் இருந்து இலங்கைக்கு வந்துபோது 14 நாள்கள் வவுனியாவிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டார். தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்தவுடன் அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் தெஹியத்தக்கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, மார்ச் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## தவறான முடிவெடுத்த முதியவர் உயிரிழப்பு



கொடிகாமம், மார்ச் 13


தவறான முடிவு எடுத்து வயோதிபர் ஒருவர் உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மந்துவில் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த கணபதி பொன்னம்பலம் (வயது - 68) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-159)

# அலுவலரைத் தாக்கினாரெனகிளிநொச்சியில் ஒருவர் கைது



கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக அலுவலர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமாக மணல் அகழ்வுகள் தொடர்கின்றன. இந்த நிலையில் நேற்றுப் பகல் கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதிக்கு கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக அலுவலர் மற்றும் கமநலசேவை நிலையத்தின் அலுவலர்கள் ஆகியோர் களப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில், ஒருவருடைய வயல் காணியில், அவரது முழுமையான ஒத்துழைப்புடன் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தடுக்க முற்பட்ட கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக அலுவலர் மீதே சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தன்னை டிப்பர் வாகனத்தால் மோதுவதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், எந்தவித அனுமதிகளுமின்றி கனரக வாகனம், டிப்பர் வாகனம் மற்றும் கப்ரக வாகனம் என்பவை சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டமை தொடர்பிலும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெரும்பாக அலுவலர் முறைப்பாடு செய்துள்ளார். (த-6)

# டக்ளஸின் கருத்துடன் உடன்பட மறுக்கிறேன்

## கிளி. மாவட்டச் செயலர் கூறினார் என அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்த கருத்துடன் உடன்பட மறுக்கிறேன் என, அவரே (கிளிநொச்சி மாவட்டச் செயலர்) என்னுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு தெரியப்படுத்தினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

'யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரின் பெயரால் சில விடயங்கள் நடக்கின்றன. அது அவருக்குத் தெரிந்து நடக்கின்றதா இல்லை தெரியாமல் நடக்கின்றதா என்பது தெரியவில்லை' என்று கடந்த 6ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சமுர்த்தி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலர் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டமை மற்றும் அரச அதிகாரிகள் அச்சுறுத்தப்படுகின்றமை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார் என, அவரது உறவினரால் இயக்கப்படும் ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளிகளுடன் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு தீர்மானித்திருந்த நிலையில், அதற்கான அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவிடம் கோரியிருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவை பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவிடம் அனுமதி கோரினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கோரிக்கை வரவேற்கப்பட்டதுடன், நிகழ்வை நாடாத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது எனவும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதனின் உதவியாளர், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி பயனாளிகளுடன் கலந்துரையாடலை நடாத்துவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் அனுமதி கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலருடன் கலந்துரையாடி அறிவிக்கின்றேன் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால், அங்கஜன் இராமநாதனின் உதவியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த கோரிக்கைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் செயலர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே, சிவில் பணியாளர்களை அங்கஜன் இராமநாதனின் ஒருங்கிணைப்பாளர்கள் அச்சுறுத்தினர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார் என்று அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் குறித்த கருத்துகளை அரசுக்கு எதிரான ஊடகங்கள் பயன்படுத்திக் கொண்டு, வேறுபாடுகளை உருவாக்க முயற்சி க்கின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், இந்த விடயம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து தான் வருந்துகின்றேன் எனவும், அமைச்சரின் கருத்துடன் தான் உடன்படவில்லை எனவும், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தொலைபேசி மூலம் தனக்கு தெரியப்படுத்தியுள்ளார் எனவும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(ஒ.5)

# இலங்கைத் தேயிலைக்கு சர்வதேசத்தில் களங்கம்

## சூத்திரதாரியைக் கைது செய்யக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13

வெளிநாடுகளுக்கு கழிவுத் தேயிலையை விற்பனை செய்வதன் மூலம், இலங்கைத் தேயிலைக்கு சர்வதேச ரீதியில் களங்கம் விளைவிக்கப்படுகிறது.

எனவே வியாபாரத்தின் பிரதான சூத்திரதாரியைக் கைதுசெய்ய வேண்டும் என்று சுங்கத் திணைக்களத்தினர், நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், கழிவுத் தேயிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வர்த்தகம் முன்னெடுக்கப்படுகிறது.

மிளகாய்த் தூள் மற்றும் அரிசி மா என்ற போர்வையில் வெளிநாடுகளுக்கு கழிவுத் தேயிலைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு 70 ஆயிரம் கிலோகிராம் கழிவுத் தேயிலை அடங்கிய நான்கு கொள்கலன்கள், டுபாயில் அண்மையில் கைப்பற்றப்பட்டன. அவை எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு மீண்டும் கொண்டுவரப்படவுள்ளன. இதற்கு முன்னர் கழிவுத் தேயிலை அடங்கிய 160 பாரவூர்தி கொள்கலன்கள் ஈராக்குக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பான பிரதான சந்தேக நபருக்கு பல தடவைகள் நீதிமன்றில் முன்னிலை யாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை.

குறித்த சந்தேக நபர் கொலன்னாவை பகுதியைச் சேர்ந்தவர். எனவே அவரைக் கைது செய்ய வேண்டும் என்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (க-இ)



# பிரதேச செயலர்களுக்கு படிப்பறிவு இல்லையாம்!

## *யாழ்ப்பாண அரசியல்வாதியின் உறவினர் அநாகரிகப் பேச்சு*

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக மூத்த அதிகாரி ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பெடுத்த, ஆளும்கட்சி அரசியல்வாதியின் உறவினர் ஒருவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் படிப்பறிவில்லாதவர்கள் என்று அநாகரிகமான முறையில் கடுமையாகப் பேசியுள்ளார். அவரின் அநாகரிகப் பேச்சுக் குறித்து மூத்தநிலை அலுவலர் தனது ஆதங்கத்தை சக அலுவலர்களுடன் பகிர்ந்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆளும் கட்சியிலுள்ள அரசியல்வாதி ஒருவர், நிர்வாக விடயங்களில் தலையீடு செய்வதுடன், பிரதேச செயலர்கள் மற்றும் அதிகாரிகளை அரசியல் பழிவாங்கல் நோக்குடன் இடமாற்றம் செய்கிறார் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. பயனாளிகள் தெரிவில் தன்னால் வழங்கப்படும் பெயர்ப்பட்டியலையே தெரிவுசெய்ய வேண்டும் என்றும் அந்த அரசியல்வாதி அழுத்தம் கொடுக்கிறார் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், பயனாளிகள் தெரிவின் இறுதிப் பட்டியல்களை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆளுநரின் பணிப்புரையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பிரதேச செயலர்களுக்கான கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அறிவுறுத்தியிருந்தார்.

கடந்த புதன்கிழமை மதியமளவில் தொலைபேசியூடாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலக மூத்தநிலை அதிகாரியைத் தொடர்புகொண்ட, ஆளும் கட்சி அரசியல்வாதியின் உறவினர், பிரதேச செயலர்கள் படிப்பறிவில்லாதவர்கள். அவர்களுடன் வேலை செய்ய முடியாது என்று அநாகரிகமான முறையில் பேசியுள்ளார். அதை அமைதியாகச் செவிமடுத்த மூத்த அதிகாரி, அரசியல்வாதியின் உறவினரின் செயற்பாடு தொடர்பாக, சக அலுவலர்களுடன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசியல்வாதிகள் மாத்திரமல்லாது அவர்களது உறவினர்களும் தங்களுக்கு கட்டளையிட்டு பேசும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். (ஒ-5)

# மாகாண சபைத் தேர்தலில் சு.க.தனித்து போட்டியிடும்?

## மைத்திரி தலைமையில் ஆராய்வு

கொழும்பு, மார்ச் 13

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டியிடக்கூடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றிலும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக்கட்சி பங்காளியாக இருப்பதால், கூட்டணியாக தேர்தலை எதிர்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், அது குறித்து பரீசிலிக்க வேண்டும். தேவையான இட ஒதுக்கீடுகள் கிடைக்காத பட்சத்தில் தனி வழி செல்வதே சிறந்தது எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் தனி வழி சென்றால் கூட அரசிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறாது. மத்தியில் கூட்டணி பயணம் தொடரும் என்று சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-44)

AL - 2023
கொழும்பில் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
கணித, உயிரியல் பிரிவு
தமிழ்மொழிமூலம் & ஆங்கிலமொழிமூலம்
ZOOM ஊடாக
ஆரம்பம்: 14.03.2021
உயிரியல்
• V.Umashanger B.Sc., PGDE
• R.Mahima B.Sc., PGDE
இணைந்த கணிதம்
• S.Premnath B.Sc.
• V.Rajaratnam B.Sc., PGDE
இரசாயனவியல்
• V.Parameshwaran B.Sc., PGDE
• S.V.Selvaranjan B.Sc., PGDE
பௌதிகவியல்
• S.R.Jeyakumar B.Sc., PGDE
• S.Srikanagasabai M.Sc., PGDE
ICT
• R.Mathisugan B.Sc.
Noble Academy
6C Ramakrishna Terrace, Wellawatte Colombo - 06.
011 236 3831, 011 236 0848
Whatsapp: 076 758 0659 (Message only)

இலங்கையின்

# நிதி முன்னேற்றங்களை கண்காணிக்கும் ஐ.எம்.எப்

கொழும்பு,மார்ச் 13

**இலங்கையின் பொருளாதார கொள்கை நிதி முன்னேற்றங்களை, சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது என்று, நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் அதிகாரி ஜெர்ரி ரைஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கையுடன் 10 பில்லியன் யுவான் (1.54 பில்லியன் டொலர்) நாணய மாற்றத்துக்கு சீனா ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பில் ஜெர்ரி மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட நிதித் திட்டம், கடந்த ஆண்டு ஜுன் 2020 இல் காலாவதியானது. இதேவேளை கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடன் அவசர நிதி உதவி கோரியுள்ளது.

பொருளாதாரச் சவால்கள் மற்றும் அதிக அளவான பொதுக் கடன்கள் காரணமாக குறித்த நிதியை வழங்குவது தொடர்பில் மதிப்பீடு செய்வதற்குக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதனை விரைவுபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக தற்போது ஆராய்ந்து வருகின்றோம். -என்றார். (க-இ)



## இந்தியத் தூதுவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின்போது பல இடங்களுக்கும் சென்று பலரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன் பின்னர் நல்லை ஆதீனத்துக்கு சென்று ஆதீன குருமுதல்வரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து இந்திய உதவியில் அமைக்கப்பட்டுவரும் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட்டார். (ஐ-20)

## தாயகம் திரும்புவோரிடம் பணம் பறிக்கும் கும்பல்

கொழும்பு,மார்ச் 13

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவர்களிடம், தனிமைப்படுத்தல் என்ற போர்வையில் பெருந்தொகைப் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது.

நட்சத்திர விடுதிகளில் தங்க வைப்பது, அதற்கான கட்டண நிர்ணயம், வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் விமானப் பயணசீட்டுக் கட்டணம் ஆகியவை தொடர்பில் பெரும் நிதி முறைகேடுகள் இடம்பெறுகின்றன.

இவற்றைத் தடுக்க நாடு திரும்பும் இலங்கையர்கள் கட்டாயம் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாம் தங்கியிருந்த நாட்டில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று, நாடு திரும்பும் இலங்கையர்களை, கட்டாயத் தனிமைக்காக, அரசு நடத்தும் நிலையங்களுக்கோ அல்லது சொந்த நிதியைச் செலுத்த வேண்டியுள்ள நட்சத்திர விடுதிகளுக்கோ அனுப்பக்கூடாது.

அரசு நடத்தும் நிலையங்களில் தங்க வைக்கப்படுபவர்கள், அங்கு முறையாகக் கவனிக்கப்படுவதில்லை. எங்கும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன. பணம் பறிக்கும் கோஷ்டிகளுக்கு இடம் அளிக்கும் முறையில் அரசின் சட்ட திட்ட விதிமுறைகள் ஒருபோதும் அமையக் கூடாது. -என்றுள்ளது. (க-இ)

## 304 தொற்றாளர்களில் கொழும்பில் 75பேர்

கொழும்பு, மார்ச் 13

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் இனங்காணப்பட்ட 304 தொற்றாளர்களுள் 75 பேர் கொழும்பு வாசிகள் என கொரோனாத் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## சிறையில் சிக்கிய பொருள்கள்

கொழும்பு. மார்ச் 13

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, தொலைபேசிகள் உள்ளிட்ட சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன

5 தொலைபேசிகள், 10 சிம் அட்டைகள், 10 பற்றரிகள், சார்ஜர்கள் மற்றும் 21 சிறிய போதைப்பொருள் பொதிகள் 7 பெரிய போதைப் பொருள் பொதிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



## குப்பைமேட்டுத் தீயால் 5 லட்சம் ரூபா நஷ்டம்

சாவகச்சேரி, மார்ச் 13

கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு அருகிலுள்ள குப்பைமேட்டில் ஏற்பட்ட தீயால் சாவகச்சேரி நகர சபைக்கு சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உடமை இழப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையால் சேகரிக்கப்படும் கழிவுகள் குறித்த இடத்தில் கொட்டப்பட்டு தரம் பிரிக்கப்படுகின்றன. அதன்போது பிரித்தெடுக்கப்படும் பாவனைக்குதவாத ரயர்கள் கட்டடத்தின் அருகிலும் குவிக்கப்பட்டிருந்தன.

கடந்த புதன்கிழமை மாலை குப்பைகள் எரிந்து கொண்டிருந்தபோது ரயர்களில் பற்றிய தீ கட்டடத்துக்கும் பரவியுள்ளது. இதனால் கட்டடத்தில் இருந்த பெறுமதியான உபகரணங்கள், உட்பட கட்டடத்தின் கூரைப் பகுதியும் எரிந்துள்ளன.

தீயைக் கட்டுப்படுத்த உப தவிசாளர் தலைமையில் பணியாளர்கள் நீர் விசிறி அணைக்க முயன்ற போதிலும் தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் யாழ் மாநகரசபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதனால் 5 லட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் எரிந்து நாசமாகியுள்ளன. (வ-9)

## உரிமைப் பத்திரம் இருந்தும் காணிகளுக்குள் செல்லத் தடை

### வெடிவைத்தகல் கிராம மக்கள் கவலை



வவுனியா, மார்ச் 13

வவுனியா வடக்கு நெடுங்கேணி வெடிவைத்தகல் கிராமத்துக்குள் பொதுமக்கள் உட்செல்ல இராணுவத்தினரும், வனவளத் திணைக்களத்தினரும் தடைவிதித்துள்ளனர் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

குறித்த கிராமத்தில் போர் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் குடியேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. அப்பகுதியில் போருக்கு முன்னர் சிறுவர் பாடசாலை ஒன்று இயங்கி வந்துள்ளது. அப் பாடசாலையில் வயலுக்கு செல்பர்கள் மட்டுமே தங்கியிருந்து வயலுக்குச் செல்வார்கள். ஆனால் அப்பகுதிக்குள் உட்செல்வதற்கோ காணிகளைத் துப்புரவு செய்யவோ இராணுவமும், வனவள திணைக்களத்தினரும் தடைசெய்து வருகின்றனர்.

மக்கள் தம் காணிகளுக்கான உறுதி ஆவணங்களை வைத்திருக்கின்ற போதும், இராணுவத்தினர் முகாம் அமைத்து இருப்பதால் குறித்த பகுதியில் மக்கள் உட்சென்று துப்புரவு பணிகளை மேற்கொள்ளத் தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர்.

இக் கிராமத்தில் ஆரம்பத்தில் 65 குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் தற்போது 15 குடும்பத்தினர் இக்கிராமத்தில் உள்ள தமது சொந்த காணிக்குள் குடியேறுவதற்கு கிராம அலுவலர், பிரதேச செயலாளரின் அனுமதிக் கடிதத்தை இராணுவம் மற்றும் வனவளத்திணைக்களத்தினருக்கு வழங்கியிருந்தும் அவர்கள் கிராமத்துக்குள் உட்செல்ல இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

இது தொடர்பில் 2015 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் பேசப்பட்டுவந்தபோதும், இதுவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை. -என்றனர்.

இதேவேளை குறித்த பகுதிக்குள் அம்மன் ஆலயம் ஒன்று இருப்பதனால் வருடா வருடம் பங்குனித் திங்கள் உற்சவத்தை நடத்துவதற்கு மட்டும் பல்வேறு நிபந்தனைகளுடன் குறித்த பகுதி மக்கள் அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-110)

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அரக்கன் அகலவில்லை!

யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து பிறிதொரு கொரோனாக் கொத்தணி ஏற்படுவதற்குரிய ஏதுநிலைகள் அனைத்தும் தெளிவாகத் தென்படுகின்றன. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான காரைநகர் மற்றும் கோண்டாவில் சாலைகளில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் பெருமளவானோர் நடத்துநர்களும் செலுத்துநர்களும்.

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் துறைக்குள் கொரோனா ஊடுருவி விட்டால், அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாகவே அமையும். மினுவாங்கொடவில் ஏற்பட்ட கொத்தணியை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். எனவே போக்குவரத்துத் துறைக்குள் தற்போது கொரோனா ஊடுருவியுள்ளமையானது பேரச்சப்பட வேண்டிய விடயம்தான். இந்த நிலைமை ஏராளமான தொற்றாளர்களை யாழ்ப்பாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் ஏற்படுத்தி விடக்கூடிய வல்லமை மிக்கது.

காரைநகர் சாலையிலும், கோண்டாவில் சாலையிலும் பணியாற்றும் பலர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடம் அடுத்த வாரமளவில்தான் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தச் சோதனைகளில் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டால் நிலைமை மேலும் மோசமடையும் தீவிரமடையும். எனவே சாலைகளில் வெறும் 12 தொற்றாளர்கள்தான் என்ற முடிவுக்கு வந்துவிடாமல் அனைவரும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். குறித்த சாலைகளின் பேருந்துகளில் பயணம்செய்ய மக்கள் தாமாகவே தம்மைத் தற்காத்துக்கொள்ள அனைத்து வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி அறிவியல் நகருக்குச் செல்லும் பேருந்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயணித்த ஒருவருக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அன்றைய தினம் பயணம் மேற்கொண்ட ஏனையவர்களைத் தொடர்புகொள்ளுமாறும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்குமாறும் சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. இது விடயத்தில் கூடுதல் பொறுப்புள்ளவர்களாக, சார்ந்தோர் நடந்துகொள்ள வேண்டும். மேற்படி பேருந்தில் பயணித்தோர் தாமாகவே முன்வந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்வதன் மூலமும் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்வதன் மூலமும், தமக்கும் தம் குடும்பத்துக்கும், தாம் சார்ந்த சமூகத்துக்கும் காலத்தின் தேவையான கடமையை ஆற்றுகின்றனர் என்பதை அவர்கள் மனதில் கொள்ளவேண்டும்.

கொரோனா என்பது உயிர்கொல்லி நோய் என்ற பேரச்சம் எம்மிடையே இருந்த காலத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் தேவையான அளவு முன்னெடுக்கப்பட்டன. கொரோனாத் தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான சுகாதார நடைமுறைகள் எம்மால் போதிய அளவு பின்பற்றப்பட்டன. ஆனால் ‘இதுவும் பழகிப்போகும்’, ‘எல்லாம் கடந்துபோகும்’ என்ற தோரணையில் இன்று கொரோனாவை நாம் அணுகுவதில்லை. கொரோனாவுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாயிற்று என்பதுபோலவே எமது செயற்பாடுகள் இன்றுள்ளன.

இந்த மெத்தனப்போக்கு நிச்சயம் பேராபத்தானது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் எம்மிடத்தில் காணப்பட்ட பேரச்ச மனநிலை எங்கே போனது?. விழிப்புணர்வுகள் எங்கே போயின?. அச்சம் தேவையில்லை. அது கொரோனாவைவிட ஆபத்தானது. ஆனால் விழிப்புணர்வு தவிர்க்க முடியாதது. அந்த அரக்கன் இன்னும் உங்களை விட்டு அகலவில்லை. அகப்பட்டு விடாதீர்கள். அவதானம் அவசியம்.




# மேற்கு முனைய வேலைத்திட்டம் இவ்வருட நடுப்பகுதியில் ஆரம்பம்!

## துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13



**கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டம் இந்த வருடத்தின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்கு முனையம் தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் இணைந்து செயற்படுமாறு எமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் எமது யோசனை அரசிடம் முன்வைக்கப்படும். அதன்பின்னர் சர்வதேச உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, மேற்கு முனையம் கட்டியெழுப்படும். 85 வீதம் முதலிடும் நிறுவனம் வசமும், 15 வீதம் துறைமுக அபிவிருத்தி அதிகார சபை வசமும் இருக்கும். இந்த வருடத்தின் நடுப்பகுதியில் வேலைத்திட்டம் ஆரம்பமாகும் - என்றார்.

(ற-44)

# உயர் நீதிமன்றில் ஜே.வி.பி. மனு

கொழும்பு,மார்ச் 13

இறக்குமதி செய்யப்பட்ட சீனி மீதான வரியைக் குறைத்ததன் மூலம், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு காரணமாக, மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து, உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி இந்த மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

சீனி இறக்குமதிக்கான வரி 50 ரூபாவாக இருந்த போது, 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரையான காலத்தில் 25 சதமாகக் குறைக்கப்பட்டது.

அதில் ஆயிரத்து 590 கோடி ரூபா மோசடி நடந்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் நடந்த மிகப் பெரிய வரி மோசடி, இதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

# நடைமுறைகளை நாமல் மீறக்கூடாது

## உபுல் ரோஹன வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 13



ஏனையோருக்கு முன்மாதிரியாக, டுபாயில் இருந்து நாடு திரும்பவுள்ள விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் அனைவரும் ஹொட்டல்கள் அல்லது இராணுவத்தினரால் நடத்தப்படும் தனிமைப்படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவது அரசின் நடைமுறையாகும்.

இவ்வாறான நடைமுறைகளை அரசியல்வாதிகளும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். மாறாக விதிமுறைகளை மீறிச் செயற்பட முயற்சித்தால், பொது மக்கள் அரசின் மீதுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும்.

அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையிலான குழுவினர், வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் கொரோனா அச்சம் காரணமாக, 14 நாள்கள் தங்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க -இ)

# இனவாதிகளாக சித்தரித்தால் விளைவை எதிர்கொள்வீர்கள்

## அரசுக்கு ஞானசார தேரர் எச்சரிக்கை



**கொழும்பு,மார்ச் 13**

**குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து அரசுகளும், அடிப்படைவாதத்தை வளர்த்து எம்மை இனவாதிகளாக சித்தரித்தன. இனியும் அதற்கு இடம் கொடுக்க மாட்டோம்.**

இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக இனி கடுமையான நடவடிக்கைகளை நாடு தழுவிய ரீதியில் பௌத்த துறவிகளை ஒன்றிணைத்து முன்னெடுப்போம்.

இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுதந்திர சதுக்க வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவையும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை. மாறாக தனிப்பட்ட முரண்பாடுகளுக்குப் பழி தீர்க்கும் ஒரு களமாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு செயற்படுத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையில் பௌத்த அமைப்புக்களைத் தடை செய்யும் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அறிக்கைகளுக்கு பௌத்த அமைப்புக்களை ஒருபோதும் அடிபணிய வைக்க முடியாது. நாட்டில் இனவாதத்தைத் தோற்றுவிக்கும் வகையில் பௌத்த அமைப்புக்கள் ஒருபோதும் செயற்படவில்லை.

அனைத்து மதத் தலைவர்களையும் ஒன்றிணைத்து நாடு தழுவிய ரீதியில் இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை இனி முன்னெடுப்போம் - என்றார். (க-இ)

# ஜெனிவா விவகாரத்தில் இந்தியா சற்றுத் தளம்பல்

## லங்கா சமசமாஜ கட்சி எதிர்வுகூறல்

கொழும்பு,மார்ச் 13

ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது அந்த எதிர்பார்ப்பில் சற்று தளம்பல் நிலை காணப்படுகிறது. இந்தியா தற்போது அமெரிக்காவின் கொள்கையை அனுசரித்துச் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இடம்பெறவுள்ள கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும். ஒரு நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எவ்வித பிரேரணைகளையும் பிற நாடுகளால் புகுத்திவிட முடியாது. ஆகவே ஜெனிவா விவகாரத்தை அரசு நுணுக்கமான முறையில் கையாள வேண்டும். சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியமாகும். ஒருபுறம் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையில் முரண்பாடு. மறுபுறம் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் முரண்பாடு. இந்த மூன்று நாடுகளும் இலங்கையை ஜெனிவா விவகாரத்தில் நெருக்கடிக்குள்ளாக்கக் கூடாது.

சீனா இலங்கைக்கு எதிராகத் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்ற உறுதிப்பாட்டை அமெரிக்காவும், இந்தியாவும் விரும்பவில்லை.

பலம் கொண்ட இந்த மூன்று நாடுகளும் இலங்கையின் தேசிய வளங்களை ஏதாவது ஒரு வழியில் கைப்பற்ற ஆரம்ப காலத்தில் இருந்தே பல்வேறு வழிமுறைகளில் முயற்சித்துள்ளன- என்றார். (க-இ)

# தமிழர் வாழ்வில் ஒளியேற்ற பிரிட்டன் கதவுகளை திறக்கட்டும்

## அம்பிகையின் போராட்டத்துக்கு த.தே.ம.மு. ஆதரவு

யாழ்ப்பாணம்,மார்ச் 13

பிரிட்டன் அரசு, தனது நீதிக்கான கதவுகளை இதயசுத்தியுடன் திறந்து, தமிழர் வாழ்வில் ஒளியேற்ற முன்வர வேண்டும். அத்துடன், ஏனைய சர்வதேச சக்திகளையும், தமிழர் தரப்பின் நீதிக்காகச் செயற்பட அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக திருமதி. அம்பிகை செல்வகுமார் பிரிட்டனில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார். அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முன்னணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அம்மையாரின் அகிம்சை முறையிலான போராட்டத்தை சர்வதேச தரப்புக்கள் மதித்து, பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுத்தர இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்தப் பரிந்துரைக்குமாறு ஐ.நா.பாதுகாப்புக் குழு மற்றும் ஐ.நா. பொதுச் சபைக்கு பரிந்துரைத்தல் மற்றும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை திறம்பட விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அம்மையார் மேற்கொண்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் 13 ஆவது நாளைக் கடந்துள்ளது.

ஜனநாயகத்தை மதிக்கும் நாடாக சர்வதேச அரங்கில் தன்னைக் காட்டிக்கொள்ளும் பிரிட்டன், தமிழர்களின் இன்றைய நிலைமைக்குப் பொறுப்புக்கூறவேண்டிய கட்டாயம் உள்ளது. காலனித்துவ ஆட்சியின் முன்னர் தமிழர்கள் தேசமாகவே வாழ்ந்திருந்தோம். இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கும் போது, தமிழர்களுக்குரிய அந்தஸ்தை வழங்கும் வகையில் பிரிட்டன் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால், தமிழர்கள் ஒடுக்கு முறைகளையும், இனவழிப்பையும் சந்தித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. எனவே அம்மையாரின் கோரிக்கைகளை பிரிட்டன் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (க)

# சீனி இறக்குமதியில் மோசடி: நாடாளுமன்ற விவாதத்துக்கு

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு,மார்ச் 13

சீனி இறக்குமதி வரி குறைப்பால் அரசுக்கு 15.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளபோதும், உண்மையான நட்டத்தைக் கணக்கிட, தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்துவதற்கும் கோரப்படும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சீனி இறக்குமதி செய்வதற்கு 25 சதம் வரை வரி குறைக்கப்பட்டதால், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை அரசுக்குக் கிடைக்க இருந்த பில்லியன் கணக்கான வருமானம் இழக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உண்மையான நட்டத்தைக் கணக்கிட வேண்டும். அதற்காக நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும் - என்றார். (க-இ)

# விவசாயிகளுக்கு காணி வங்கி

கொழும்பு,மார்ச் 13

விவசாயத்துக்கான காணிகளைப் பெறுவதற்கு, வங்கியொன்றை அமைப்பதற்கு நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்சவால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக சகல நிறுவனங்களுக்கும் தமக்குச் சொந்தமான இடங்களை காணி வங்கியின் கீழ் கொண்டு வர வேண்டும்.

அந்த இடங்களைத் தெரிவுசெய்து தெங்கு, கறுவா உள்ளிட்ட சிறந்த பயிர்ச் செய்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (க-இ)

# உண்மையைக் கண்டறிதலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி

## சஜித் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய நிவாரணத்தை வழங்கினாலும், உயிரிழந்தவர்களை மீள உயிர்ப்பிக்க முடியாது. எனவே உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்கமான விசாரணைகளை முன்னெடுத்து, அவர்களுக்கான நீதியை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க, வெளியிட்டிருந்த கருத்துத் தொடர்பில், அவர் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்று முன்தினம் வாக்குமூலமளிக்க அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் எதிர்க்கட்சித் தலைவரும் வருகை தந்தார்.

அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாச, மிலேச்சத்தன மான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான குற்றவாளிகள் இனங்காணப்பட்டு, அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும்.

தற்போது சமர்பிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் இதனுடன் தொடர்புடைய ஒரு பகுதி மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் பிரதான சூத்திரதாரிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியதே தற்போதைய தேவையாகும் - என்றார். (க-இ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு பஸிலே பொருத்தம்

## பெரமுன எம்.பி. உறுதி

பஸில் ராஜபக்சவை வீழ்த்த முடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அவரே பொருத்தமான வேட்பாளர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது,


"அரசியல் சூழ்ச்சிக்காரர்கள் இருக்கின்றனர் என்று விமல் வீரவன்ச குறிப்பிடுகின்றார். சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் அத்தகையவர்கள் இல்லை. சிலவேளை மொட்டுடன் கூட்டணி வைத் திருப்பவர்களின் கட்சியில் வேண்டுமானால், அவ் வாறான சூழ்ச்சியாளர் இருக்கக்கூடும். குரங்கு போல் அங்கும் இங்கும் தாவி, மஹிந்த ராஜபக்ச வின் முதுகில் ஏறி அரசியல் செய்துவிடலாம் என்ப தற்காகவே சிலர் தொண்டை கிழியும் அளவுக்குக் கத்துகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச போட்டியிடமாட்டார் என்று அறிவித்து பொதுஜன பெரமுனவைச் சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சிக் கின்றனர். அந்த முயற்சி கைகூடாது. இன்னும் 4 ஆண்டுகள் உள்ளன. அதேவேளை, அடுத்த ஜனா திபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச போட்டியிட மாட்டாரெனில், அனைத்துக் கட்சிகளையும் அரவ ணைத்துக் கொண்டு, நாட்டு மக்களுக்கு சேவை யாற்றக்கூடிய மதிநுட்பம் உள்ள தலைவர் தான் பஸில் ராஜபக்ச. அவரே ஜனாதிபதித் தேர்தலுக்குப் பொருத்தமானவர் என்பதே மொட்டுக் கட்சியின் நிலைப்பாடு.

எனினும், பஸில் ராஜபக்ச வருவதை சில குழுக்கள் விரும்பவில்லை. அதனால் தான் சேறு பூசும் நட வடிக்கையில் இறங்கியுள்ளனர். என்ன செய்தாலும் பஸில் ராஜபக்சவை வீழ்த்த முடியாது." - என் றார். (க-44)

## மன்னாரில் கடும் மழை

# அறுவடைக்குத் தயாரான நெற்கதிர்கள் பாதிப்பு



**மன்னார், மார்ச் 13**

**மன்னாரில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் பெய்த கடும் மழை காரணமாக, அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் நீரில் மூழ்கியுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கடந்த இரு நாள்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு போன்ற பிரதே சங்களில் பல ஏக்கர் வயல்களில் கதிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தற்போது நெல்லுக்கு நல்ல விலை இருப்பதனால் அறுவடை செய்யும் நேரத்தில் இயற்கை இவ்வாறு அழிவைத் தந்துள்ளது.

அத்துடன் அறுவடை செய்து காய வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான நெல் மூடைகளும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கள் தெரிவித்தனர். (ஐ-213)

# வயல் அறுவடை நிகழ்வு ஆரம்பம்

வவுனியா, மார்ச் 13

வவுனியா பாவற்குளத்தில் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வயல் அறுவடை நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.பந்துல சேன தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த அறுவடை நிகழ்வை வவுனியா மாவட்டச் செய லர் மற்றும் அதிதிகள் இணைந்து ஆரம்பித்தனர்.

பாவற்குளம் பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 4 ஆயிரத்து 134 ஏக்கர் பயிர் செய்யப்பட்டுள்ளது. இதன் போது, பாவற்குளத்தைச் சேர்ந்த 12 கமக்கார அமைப் புக்கள் ஒன்றிணைந்து, அவர்களுக்கான தேவை களை மாவட்டச் செயலரிடம் கோரிக்கையாக முன் வைத்தனர். (ந-10)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### சங்கானையில்...

பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட் டது. அவர்களில் ஒருவர் மருத்துவர். மூவர் சிறைச்சாலையில் இருந்து விடு விக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத் தப்பட்டிருந்தவர்கள். ஒருவர் தொற்று டன் இனங்காணப்பட்ட கார்கில்ஸ் பணியாளர்களுடன் தொடர்பில் இருந் தவர்.

அதேநேரம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்றவேளை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டிருந்த இருவருக்கும் நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்றாளர்கள் இருவரும் யாழ்ப்பா ணம் நகர் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

அவர்களில் ஒருவர் வெளிநாடு செல்வ தற்காக நுழைவு விசாவுக்கு விண்ணப் பித்திருக்கும் மாணவராவார். மற்றைய வர் கொரோனாத் தொற்று அறிகுறி காணப்பட்டதை அடுத்து மருத்துவ மனைக்குச் சென்றவராவார். இவர்களு டன் தொடர்புடையவர்களை இனங்கா ணும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவி னரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட் டது என்பது தெரியவரவில்லை. (எ26)

### வவுனியாவில்....

சாலையில் இதுவரை 21 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

வவுனியா, கண்டி வீதியில் அமைந் துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன் றின் பணியாளர்களே வைரஸ் தொற் றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேவேளை, வவுனியா மருத்துவம னையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதார அதிகாரிகளால் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (எ-18)

### தென்னாபிரிக்க...

மற்றும் மூலப்பொருள் உயிரியல் நிறு வனத்தின் இயக்குநர் சந்திம ஜீவந்தரா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வெளிநாட்டிலிருந்து வந்து தனிமைப்ப டுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்ட ஒருவரிடமே புதிய வைரஸ் திரிபு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் 93 வைரஸ் திரிபுகள் வரிசைப்படுத்தப்பட்டன. அவற் றில் 81 வைரஸ் திரிபுகள் இலங்கையில் பரவிவரும் விகாரங்களைக் கொண்டுள் ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து நாடு திரும் பியவர்களிடையே 5 வகையான புதிய வைரஸ் திரிபுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

பிரிட்டனில் பரவும் வைரஸ் திரிபு மாறு பாட்டைக் கொண்ட நான்கு பேரும், தொன்னாபிரிக்க வைரஸ் திரிபைக் கொண்ட ஒருவரும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளனர்.

இலங்கையில் தென்னாபிரிக்க வைரஸ் திரிபைக் கொண்ட ஒருவர் அடையாளம் காண்பது இதுவே முதன்முறையாகும். இந்த வைரஸ் திரிபு தடுப்பூசி மருந்தின் நோய் எதிர்ப்பு சக்தியில் இருந்து தப்பிக் கும் திறன் கொண்டது.-என்றார். (எ-இ)

### யாழ்.....

தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் மடு புனித தேவாலயத்தில் இந்திய அரசின் 300 மில்லியன் ரூபா நிதி உதவியில் அமைக்கப்படும் யாத்திரிகர் மடத்துக் கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங் கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் கலந்து கொண்டிருந்தார்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்துவ தற்கு இந்தியா உதவ முன்வந்திருந்தது. கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் மிக நீண்ட இழுபறியின் பின்னர் யாழ்ப் பாணம் சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பா ணம் விமான நிலையத்திலிருந்து சென் னைக்கு மாத்திரம் நேரடி விமான சேவைகள் நடைபெற்று வந்தன.

கட்டுநாயக்கவில் அறவிடப்படும் கட்ட ணத்தை விட அதிகளவான கட்டணம் யாழ்ப்பாண விமான நிலையத்தில் அற விடப்படுகிறது எனவும், குறைந்தளவி லான பொதிகளே அனுமதிக்கப்படுகி றன எனவும் குற்றம் சுமத்தப்பட்டு வந் தது. யாழ்ப்பாண விமான நிலையத்தை தொடர்ந்து மேம்படுத்தி இயக்குவதற் கான எத்தனம் அரசிடம் இல்லை என் றும், அதன் காரணமாகவே இவ்வா றான நிலைமை நீடிக்கப்பட்ட வண்ணம் காணப்படுகின்றது எனவும் குற்றச்சா ட்டுக்கள் எழுந்திருந்த சூழலில், கடந்த ஆண்டு கொரோனாத் தொற்றைக் கார ணம் காட்டி, சகல விமான நிலையங்க ளும் மூடப்பட்டன. இந்நிலையில் யாழ்ப் பாணம் சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டது. தற்போது நாட்டின் ஏனைய விமான நிலையங்கள் திறக்கப்பட்ட போதும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறக்கப்படவில்லை. அதனை நிரந்தரமாக மூடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரி வித்திருந்தது. எனவே இந்த விமான நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு சூழலிலேயே, இந் தியத் தூதுவர் முன்பாக, யாழ்ப்பாண விமான நிலையத்திலிருந்து சென் னைக்கான நேரடி விமான சேவை மிக விரைவில் இடம்பெறும் என்று அமைச் சர் பிரசன்ன ரணதுங்க - தெரிவித்துள் ளார். (ஒ-5)

### நிலாவெளி....

யாழ்ப்பாணம், குப்பிளானைச் சேர்ந்த வயாவிளான் மத்திய கல்லூரி மாணவ னான சிந்துஜன் (வயது-21), ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மாணவனான கௌதமன் (வயது-21) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் நண்பர்களுடன் திருக்கோ ணேஸ்வரம் சென்றுள்ளனர். நேற்று மதியம் இவர்கள் நிலாவெளிக் கடலுக்கு நீராடச் சென்றுள்ளனர். அதன்போதே இவர்கள் கடலில் மூழ்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நிலாவெ ளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-25)

# ஆசிரியர் கலாசாலைகளை உடன் விடுவிக்க வேண்டும்

## இலங்கை அதிபர்கள் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 13**

**கொரோனா சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்படும் 19 ஆசிரியர் பயிற்சி மையங்கள் விரைவில் விடுவிக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்படும் என்று இலங்கை அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ தெரிவித்ததாவது;

மூன்று ஆண்டு காலத்துக்கு ஆசி ரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் அறிவியல் பீடங்களில் புதியவர்க ளைப் பயிற்றுவிக்க வேண்டும். இருப்பினும் 19 ஆசிரியர் பயிற்சி மையங்கள் தற்போது கொரோனா சிகிச்சை மையங்களாக பயன்படுத்தப்பட்டு வருவதால், புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சி இல்லாததால் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது- என்றார். (ஐ-இ)




## விதிகளை மீறி சாரத்தியம்; 11பேருக்கு ரூ. 332,500 தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 13

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 11 சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 3 லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா தண்டம் நேற்று விதிக்கப்பட்டது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 11 பேருக்கு எதிராக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்கள் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணையில் சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக ஒரு லட்சம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய எட்டுப் பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக இரண்டு லட்சம் ரூபாவும், சாரதிய அனுமதிப் பத்திரம், மற்றும் தலைக்கவசம், ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவர் தனது தொழிலுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவை என தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றைக் கோரியதால், அவருக்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஏனையோரின் சாரதி அனுமதிப்பத்திரங்களை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (வ-9)



## நிலக்கடலை அறுவடை நிகழ்வு

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - மந்துவில் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் அமைப்பொன்றால் நிலக்கடலை அறுவடை செய்யப்பட்டது.

இந்த அறுவடை நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமாரன், மந்துவில் பிரதேச பங்குத்தந்தை, பூந்தளிர் சுய உதவிக்குழுவின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-222)



பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகிய சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தின் மகாசிவராத்திரி உற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

லிங்கோற்பவருக்கு விஷேட பூசை வழிபாடுகள் மற்றும் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்ற பின்னர், தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சிவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (ற-20)



சிவராத்திரியை முன்னிட்டு மூன்று ஜாம பூசை நிகழ்வுகள் முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. (ய-110)

## சங்காபிஷேகம்

சாவகச்சேரி, மார்ச் 13

மிருசுவில் கந்தசுவாமி கோயிலில் 108 சங்காபிஷேக ஸ்கந்த ஹோம பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஹோமம் தொடர்பான கிரியைகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

மறுநாள் யாக பூசை, 108 சங்குப் பூசை, 108 திரவிய ஸ்கந்த ஹோமம், தாரா ஹோமம், உபசார ஹோமம் , 108 சங்காபிசேகம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

அருள்வாக்குச் சித்தர் குக்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் இந்தப் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ற-9)



## நகுலேஸ்வரத்தில் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி கோயிலின் தேர்த் திருவிழா நேற்றுமுன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவத்தின், 14 ஆவது நாள் உற்சவமான தேர்த்திருவிழா சிவராத்திரி தினமான நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இதன்போது சிவராத்திரி விசேட பூசைகள் நடைபெற்று, 15 ஆம் நாளாகிய நேற்று கீரிமலை புனித கண்டகி தீர்த்தத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நிறைவு பெற்றது. (ற-இ)



சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. (ஐ-159)

# படுகொலை செய்தவர்களுக்கு பதவி உயர்வு; உரிமைக்காக போராடுவோர் பயங்கரவாதிகள்!

## இதுவே இலங்கையின் நீதி என அரசைச் சாடுகிறார் அமலநாயகி

**மட்டக்களப்பு, மார்ச் 13**

**படுகொலை செய்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்கிவிட்டு உரிமைக்கான போராட்டங்களை மேற்கொள்ளும் எங்களை அரசு பயங்கரவாதிகளாக சித்தரிக்கின்றது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.**




தங்கள் உறவுகளுக்கான நீதி கோரிய ஜனநாயக ரீதியான உரிமைப் போராட்டங்களை நீதிமன்றத் தடையுத்தரவின் மூலம் தடுப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

யுத்தம் முடிவுற்ற காலம் தொடக்கம் கையில் புகைப்படங்களுடனும், கண்ணீருடனும் பல அச்சுறுததல்களுக்கும் மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றோம். இலங்கை அரசினூடாக எவ்வித தீர்வும் கிடைக்காததாலேயே எமது போராட்டங்களை சர்வதேசத்தை நோக்கி நகர்த்தியுள்ளோம். ஆனால் அரசு கூலிப்படைகளைக் கொண்டு எங்களைத் துரத்தி எங்களை நீதியின் முன் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கின்றது. எமது உரிமைக்கான போராட்டங்களுக்கு தடையுத்தரவு வழங்குகின்றது. இதனால் நாங்கள் தற்போது நீதி கேட்கக் கூட இயலாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதுதான் தற்போது இலங்கையின் ஜனநாயகமாக இருக்கின்றது. எமது தாய்மாரையும் இழந்து கொண்டிருக்கின்றோம். எமது சாட்சியங்களும் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே இனியும் தாமதிக்காமல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எமது பிரச்சினைகளைப் பாராப்படுத்தி எமது உறவுகளுக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று தெரிவித்தார். (வ-150)

## 14 வீடுகள் தீக்கிரை

தோட்ட ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி பூசையில் பங்கேற்று, வீடு திரும்பிய, லயன் குடியிருப்பாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நுவரெலியா ராகலை தோட்ட இரண்டாம் பிரிவில் லயன் குடியிருப்பொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 14 குடியிருப்புகள் சேதமாகின. 54 பேர் நிர்க்கதியாகினர்.

விபத்துக்கான காரணமும், சேத விபரமும் இதுவரை கண்டறியப்படவில்லை. தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## பேருந்து மோதி மாணவன் சாவு

கொழும்பு,மார்ச் 13

பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. அதில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து ஹொரவப்பொத்தானை கபுகொல்லேவ பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவன் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

## நீரில் மூழ்கி இருவர் மாயம்

கொழும்பு,மார்ச் 13

கங்கையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கிகாணாமல்போயுள்ளனர். இந்தச் சம்பவம் மஹவெல பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல் போனவர்களைத் தேடி வருகின்றனர்.

16 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரும், 26 வயதுடைய நபரொருவருமே காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

## விமானத்தில் கடத்தப்படவிருந்த மீன்கள் பறிமுதல்

கொழும்பு,மார்ச் 13

இலங்கையிலிருந்து விமானத்தின் மூலம் லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த ஒரு தொகை மீன்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

சுமார் 60 கிலோகிராம் எடையுள்ள மீன்கள், கட்டுநாயக்க விமான நிலைய பொருள்கள் ஏற்றுமதி முனையத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

வித்தியாசமான, அதிக சுவை கொண்ட இந்த மீன்களுக்கு ஐரோப்பா உட்பட பல நாடுகளில் பெரும் வரவேற்புள்ளது.

மீன்வள மற்றும் நீர்வள ஆதாரச் சட்டத்தின் கீழ், இந்த மீன்களைப் பிடித்தல், வைத்திருத்தல், போக்குவரத்தின் போது எடுத்துச் செல்லல், கொள்முதல், விற்பனை மற்றும் ஏற்றுமதி என்பவை தடைசெய்யப்பட்டுள்ளன. அதனால் சுங்க அதிகாரிகள் அந்த மீன்களைக் கைப்பற்றினர். முறையான ஆய்வுகளுக்குப் பின்னர் மீன்கள் அழிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்!

வவுனியா, மார்ச் 13

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரிக்குளம் அம்மன் கோயில் வீதியிலிருந்து வைரவப்புளியங்குளம் புகையிரத வீதி நோக்கித் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளை, குருமன்காட்டுச் சந்தியில் இருந்து வவுனியா நகரம் நோக்கி புகையிரத வீதியில் பயணித்த கப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இந்த விபத்துத் தொடர்பில், வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ற-110,18)

## மகளிர் தின நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 13

விழுது மேம்பாட்டு மையம் மற்றும் சமுதாய சங்கிலி இளையோர் தன்னார்வக் குழு ஆகியவை இணைந்து, சர்வதேச மகளிர் தின நிகழ்வை திருநெல்வேலி பொது மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியுள்ளனர். 'செங்கோலோச்ச விழைந்தோம்' எனும் தொனிப்பொருளில் சமுதாய சங்கிலி இளையோர் தன்னார்வக்குழு அங்கத்தவர் சு.நக்கீரன். தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது. இதில் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்திலிருந்து திருமதி அனந்தி சசிதரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியிலிருந்து திருமதி மீரா அருள்நேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து திருமதி சசிகலா ரவிராஜ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து திருமதி ஞானகுணேஸ்வரி கமலச்செல்வம், விழுதுகள் நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ-159)





## இந்தியத் தூதுவரை சந்தித்தார் முதல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் மற்றும் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே விஜயம் மேற்கொண்ட போது, அவரை யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது, யாழ். பண்பாட்டு மையத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், விரைவில் பண்பாட்டு மையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது பற்றியும், அதை நிர்வகிப்பதற்கான செலவுகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. (ற-320)

# முல்லையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

## பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு நகரம் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என கரைத்துரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரை அண்டிய கிராமங்களான வட்டுவாகல், செல்வபுரம், மணற்குடியிருப்பு மற்றும் கள்ளப்பாடு உட்பட பல கிராமங்களில் கிணறு களின் நீர் மஞ்சள் நிறமாக மாற்றமடைந்து வருகிறது. இதனால் மக்கள் நன்னீர் கிணறுகளை நாடி நீண்ட தூரம் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் அந்தக் கிராமங்களில் வறட்சியால் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்படும் அபாயமும் உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் மாவட்டச் செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் குடிதண்ணீர் நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்டாலும், முல்லைத்தீவு பகுதியில் குடிதண்ணீர் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவில்லை. இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-13)

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில்

# அமைச்சர் விமல் வீரவன்சவை விசாரணைக்கு உட்படுத்துங்கள்!

சமிந்த விஜேசிறி வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 13**

**ஈஸ்டர் தாக்குதலுடன் நல்லாட்சி அரசாங்கத்தின் முஸ்லிம் உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளனர் என பகிரங்கமாகக் கூறிய அமைச்சர் விமல் வீரவன்ச ஏன் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. அவர் குற்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டால் ஏதேனும் உண்மைகளை வெளிப்படுத்துவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,
அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தற்போதைய அரசாங்கம் ஈஸ்டர் தாக்குதல்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளமை தெளிவாகியுள்ளது.
ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு ஆளும் தரப்பினர் கூடத் தயாராக இல்லை.
குறிப்பாக அமைச்சர் விமல் வீரவன்ச இதில் பிரதானமானவராகக் காணப்படுகிறார்.
தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் அடுத்த தாக்குதல்கள் இடம்பெறாமல் எமது அரசாங்கம் தடுத்தது.
இதற்கான தகவல்களை வழங்கிய புலனாய்வுப் பிரிவினர் தற்போதைய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த தேர்தல்களில் இனவாதத்தைப் பயன்படுத்திய அரசாங்கம் அடுத்த தேர்தல்களில் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.
நல்லாட்சி அரசாங்கத்தின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று பகிரங்கமாகக் கூறிய விமல் வீரவன்ச ஏன் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை? அவர் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டால் உண்மை களைக் கூறுவார் என்று எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ம-இ)

## இலங்கை தேசியக் கொடியை அவமதித்தது சீன நிறுவனம்

கொழும்பு,மார்ச் 13
இலங்கை தேசியக் கொடி பொறிக்கப்பட்ட கால்மிதிகளை, உலகின் முன்னணி இணையவழி சில்லறை விற்பனையாளரான அமேசன் நிறுவனம் விற்பனைக்கு வெளியிட்டுள்ளது.
அந்த நிறுவனத்தின் விற்பனைப் பட்டியலில், இலங்கைக் கொடியின் படம் பொறிக்கப்பட்ட கால்மிதிப்புக்கள் உள்ளிட்ட பல தயாரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.
அமேசன் இணையத்தளத்தின் விளம்பரத்தின்படி இதன் விலை 12 அமெரிக்க டொலராகும். இலங்கைக்கு அனுப்ப 9.20 அமெரிக்க டொலர் கப்பல் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கைச் சந்தையில் விற்பனைக்கு வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த கால்மிதிகளை சீன நிறுவனமொன்று தயாரித்துள்ளது. இந்தத் தகவல் சமூக வலைத்தளங்களில் விமர்சிக்கப்பட்டு வருகிறது. (க-இ)

## கொரோனா இன்னமும் கட்டுப்பாட்டில் இல்லை

வார இறுதியில் அவதானம் என்கின்றனர் பொலிஸார்

கொழும்பு,மார்ச் 13
நாட்டில் கொவிட்-19 வைரஸ் பரவல் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. பல மாவட்டங்களிலும் நாளாந்தம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.
எனவே வார இறுதி நாள்களில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண வலியுறுத்தியுள்ளார்.
வார இறுதி நாள்களான இன்றும், நாளையும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்ட விதிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
தேவையின்றி வீட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முகக்கவசம் அணியுங்கள். தனிநபர் இடைவெளியைப் பேணுதல் மற்றும் கைகளைச் சுத்தம் செய்துகொள்ளல் போன்ற சட்டவிதிகளைத் தவறாது கடைப்பிடியுங்கள் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அதேவேளை நாடளாவிய ரீதியில் முகக்கவசம் அணியாமை மற்றும் தனிநபர் இடைவெளியைப் பேணாமை தொடர்பில், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 3 ஆயிரத்து 346 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் 3 ஆயிரத்து 300 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## இலங்கை ஜனநாயகத்தை மியான்மருக்கு விற்காதீர்

சஜித் வலியுறுத்து



கொழும்பு,மார்ச் 13
இலங்கை ஜனநாயக ரீதியான நாடு. ஆனால் மியான்மரில் சர்வாதிகார இராணுவ ஆட்சி முன்னெடுக்கப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், மியான்மரை மாநாட்டுக்கு அழைத்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த அழைப்பை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இலங்கை ஜனநாயக ரீதியான நாடு என்ற வகையில், மியான்மரின் இராணுவ மயமாக்கலை எதிர்ப்பதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அவ்வாறில்லையெனில், ஜனநாயக ரீதியில் வெற்றிபெற்றுள்ள ஆங் சான் சூகி மற்றும் அவரது தரப்பினரை நிராகரித்து, இராணுவமயமாக்கலை இலங்கை ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்படுத்தப்பட்டு விடும்.
மியான்மரில் ஜனநாயக ரீதியாக அமைக்கப்பட்ட அரசிடமிருந்து, பலவந்தமாக அதிகாரத்தைப் பறித்து சர்வாதிகார இராணுவ ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது.
இந்தச் சந்தர்ப்பத்தில், சர்வதேச தொடர்புகள் பற்றி சிறிதளவும் புரிதல் அற்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர், பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு அந்த நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதனை அரசு மீளப் பெற வேண்டும். -என்றார். (க-இ)



சிவராத்திரியை முன்னிட்டு திருகோணமலை திருக்கோணேசுவரர் ஆலயத்தில் சமய வழிபாடுகள், நான்கு சாம அபிஷேகங்கள் மற்றும் விசேட பூசைகள் மிகவும் சிறப்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.
பக்தர்கள் சிவலிங்கத்துக்கு புனித தீர்த்தம் வார்க்கும் சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (ய)

## இஸ்லாமிய பாடப்புத்தகங்களை தேவைக்கேற்ப மாற்ற இயலாது

ஹசன் அலி போர்க்கொடி

கொழும்பு,மார்ச் 13
இஸ்லாம் பாடப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை, அரசின் தேவைக்காக அல்லது அரசியல் கட்சியொன்றின் தேவைக்காக மாற்ற முடியாது. இஸ்லாமிய கல்வியியலாளர்கள் அடங்கிய குழுவை நியமித்து அதற்கான தீர்வைக் காண வேண்டும்.
இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்தார்.
இஸ்லாமிய பாடப் புத்தகங்களில் காணப்படும் அடிப்படைவாத விடயங்கள் நீக்கப்படும் என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
இஸ்லாமியப் பாடப் புத்தகங்களில் எது அடிப்படைவாத விடயம் எது அடிப்படைவாதமற்ற விடயம் என்பதை அரசியல்வாதிகள் தீர்மானிக்க முடியாது.
பல்கலைக்கழகத்தினூடாக இஸ்லாமிய கல்வியியலாளர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்து, அதனூடாகவே தீர்மானிக்க முடியும். அடிப்படைவாதமென்பது அனைத்து மதங்களிலும் காணப்படுகின்றது. தாம் பின்பற்றும் மதத்தைப் பற்றி முறையாகப் புரிந்து கொள்ளாதவர்களே அடிப்படைவாதிகளாவர். மதங்களைப் பற்றி நன்கு அறிந்து அவற்றை பின்பற்றுபவர்கள் அடிப்படைவாதிகளாக இருக்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## 18 குற்றச்சாட்டுகளுடன் இலங்கையருக்கு சிறை

பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகளின் கீழ் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைப் பிரஜைக்கு 3 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
44 வயதான சம்பத் சமரநாயக்க என்பவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
இவர் 2018 ஆம் ஆண்டு பிரிஸ்பேனின் இரவு விடுதியொன்றுக்கு, 5 பெண்களை அழைத்துச் சென்றுள்ளார். அவர்களைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
பிரிஸ்பேன் மாவட்ட நீதிமன்றில் பாலியல் வன்கொடுமைகள், சுதந்திரத்தை பறித்தல், அநாகரீகமான செயல்கள் மற்றும் பொதுவான தாக்குதல் உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டன.
அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மன். மருத்துவமனையில் உள்ள பிரச்சினையை நிவர்த்தி செய்க

## செல்வம் எம்.பி. ஆளுநருக்குக் கடிதம்

மன்னார், மார்ச் 13

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் அடையாளம் காணப் பட்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ்க்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளி கள் வெயிலிலும் மழையிலும் நின்று மருத்துவ உதவியை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களது சிரமத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்க வும், அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவும் ஒரு மில்லியன் ரூபா நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள் ளது. மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவை மீண்டும் மறுசீரமைத்து அங்கத்தவர்களை இணைத்து செயல்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். குறித்த பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்திசெய்ய துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-56)

# அரச அலுவலர்கள் இல்லாமல் மாணிக்கபுரம் மக்கள் அல்லல்

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயல கத்துக்கு உட்பட்ட மாணிக்கபுரம் கிராமத்துக்கு நிலையான அரச உத்தியோகத்தர்கள் இல் லாமையால், அரச சேவையைப் பெற்றுக் கொள்வதில் அந்தக் கிராம மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாணிக்கபுரம் கிராமத்தில் 417 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவற்றில் 93 பெண் தலைமைத்துவ குடும்பங்கள், 24 மாற்றுத்தி றனாளி குடும்பங்கள் மற்றும் 31 புனர்வாழ்வு பெற்ற குடும்பங்கள் ஆகியவை உள்ளடங்கு கின்றன.

இந்தக் கிராமத்துக்கென நிலையான கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் என எவரும் இல்லை. அங்கு பதில் கடமையாகவே அரச உத்தியோகத்தர்கள் சேவை ஆற்றி வருகின் றனர்.

இதனால் அரச சேவையைப் பெற்றுக்கொள்வ தில் தாம் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக் கின்றனர் எனவும் தங்களுக்கான நிலையான ஒரு உத்தியோகத்தரை நியமிக்க வேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (வ-19)

# போராட்டத்தில் ஈடுபடுபவர்களை இந்தியத் தூதுவர் சந்திக்காதது ஏன்?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் கொண்டிருந்த இந்தியத் தூதுவர், இலங்கையை சர்வதேச குற்றவி யல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி, யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எங்களைச் சந்திக்காது சென்றது ஏன் என்று போராட்டத் தில் ஈடுபட்டு வருபவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நல்லூர் நல்லை ஆதீனம் முன் பாக நீதி வேண்டி இடம்பெறும் இந்தப் போராட்டம், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப் பட்டு தொடர்ந்து இடம்பெற்று வரு கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜ யம் மேற்கொண்ட இலங்கைக் கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்கலே, மரியாதை நிமித்தம் நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்தார்.

சந்திப்பை முடித்து திரும்பும் வழி யில், உணவு தவிர்ப்புப் போராட்டத் தில் ஈடுபடுவோரால் கோஷங்கள் எழுப்பப்பட்ட போதிலும் போராட்டத் தில் ஈடுபடுவோரை அவர் சந்திக் காது சென்றுள்ளார்.

இது அவர்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதுடன் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவி னர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர் மற்றும் மதத் தலைவர்கள் உட்பட பலர் தமது ஆதரவை தெரிவித்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ற-20)

# மகா சிவராத்திரி சிறப்பு வழிபாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சிப் புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் நேற்றுமுன்தினம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. விசேட பூசை வழிபாடுகள், அபிஷேக ஆராதனைகள் என்பவையும் இதன்போது இடம்பெற்றன.

தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த வழிபாடுகள் இடம்பெற்றன. (ற-113)

# எம்.பி.க்களின் அபிவிருத்தித் திட்டங்களில் பிரதேச செயலக உறுதிப்படுத்தல் தேவை!

சாவகச்சேரி, மார்ச் 13

நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் இவ் வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட் அபிவிருத்தி வேலைத் திட் டங்களுக்கான முன்மொழிவு கள் அந்தந்த பிரதேச செயல கங்களின் உறுதிப்படுத்தலுக் காக மாவட்டச் செயலகத்தால் அனுப்பப்படுகின்றன.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. விக்னேஸ்வரன் சாவகச் சேரி தொகுதியில் மேற்கொள்ள வுள்ள 10 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உறுதிப்படுத்தலுக் காக பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங் கள், தமது பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்படவுள்ளன என பிரதேச செயலர் உறுதிப் படுத்திய பின்னரே, அவை அபிவிருத்தி மேற்கொள்ள அங்கீகரிக்கப்படும் எனத் தெரி விக்கப்பட்டது. (வ-9)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம்,மார்ச் 13

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த புதன்கிழமை நடை பெற்றன.

தலைவராக சு.அருணாசலமும், செயலாளராக ந.புஸ்பகாந்தனும், பொருளாளராக க.சந்திரகுமாரும், உபதலைவராக ம.திவாகரும், உபசெயலாளராக வேதகீதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர் க.அருள் குமரன் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கினார்.

தொடர்ந்து சாவகச்சேரி பிரதேச சபையின் சுகாதார ஊழியர்க ளுக்கு நுளம்புவலைகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# பிரசவத்தில் குழந்தை இறப்பு வழக்கு ஜூலைக்கு ஒத்திவைப்பு

வவுனியா,மார்ச் 13

பிரசவத்தின் மூலம் பிறந்த குழந்தை ஒன்று அதே தினத்தி லேயே உயிரிழந்தமை தொடர் பில் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூலை 7ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சாதாரண பிரசவத் தின் மூலம் பிறந்த குழந்தை ஒன்று உயிரிழந்தது.

சத்திர சிகிச்சையின் மூலமே குழந்தையின் தாய்க்கு குழந் தையைப் பிரசவிக்க முடியும் என மகப்பேற்று மருத்துவர் கூறிய நிலையிலும், மருத்துவ மனையில் இருந்த மருத்து வர்கள் சாதாரண பிரசவத் தின் மூலம் குழந்தையைப் பிரசவிக்க முயன்றதாலேயே குழந்தை இறந்தது என்றும் தாய் குற்றஞ்சாட்டியிருந்தார்.

எனக்கு சத்திரசிகிச்சை மூலமே குழந்தை பிரசவிக்கப்பட வேண் டும் என மகப்பேற்று மருத்துவர் பரிந்துரைத்திருந்தார் என்று சம்பவதினமான அன்று மருத் துவமனையில் கடமையில் இருந்த மருத்துவரிடம் நான் தெரிவித்த போதும், அவர் அத னைக் கண்டுகொள்ளவில்லை எனவும் தாய் தெரித்தார்.

மருத்துவர்களின் அலட்சியத் தாலேயே தமது குழந்தை இறந்தது என பெற்றோர்கள் சந்தேகித்ததால் பெற்றோ ரின் வேண்டுதலின் பேரில் குழந்தையின் உடல் உடற்கூற் றுப் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டு வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தி னம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அந்த வழக்கு எதிர்வரும் ஜூலை 7ஆம் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குழந்தையின் இறப்புக் குறித்து பெற்றோர், வடமாகாண ஆளு நர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகி யோருக்கும் முறைப்பாடு செய் துள்ளனர். (ம-ஐ-110)

# நிர்வாகத் தெரிவு

கொடிகாமம், மார்ச் 13

கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற் றது.

குறித்த நிர்வாகத் தெரிவு கூட்டம் சாவகச்சேரி பிர தேச சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத் தியோகத்தர் சுஜித்தா பிர தீபன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, தலைவராக வ.கு.இ.கந்தசாமி, செய லாளராக நா.தசரதன், பொருளாளராக சாருகா நிரஞ்சீவ், உபதலைவராக வீ.தேவி, உப செயலாள ராக வா.சின்னத்தம்பி, கணக்காய்வாளராக ம.லலிதா, உறுப்பினர்க ளாக சி.செல்வரத்தினம், க.சறோஜினி, க.மோகன தாஸ், தே.றதீஸ்வரன், இ.பூரணம், யூ.சசிகா, த.கயானா மற்றும்ச.துஸ் யந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ய-159)

மணல் அகழ்வு

# சாதக, பாதக நிலைமைகளை கண்டறியக் களப் பயணம்



முல்லைத்தீவு, மார்ச் 13

**மணல் அகழ்வுக்கான சாதக, பாதக நிலைமைகளை ஆராயும் நோக்கில் கனகராயன் ஆற்றுப் பகுதிக்கு அதிகாரிகளால் களப் பயணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.**

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மணல் அகழ்வுக்கான சாதக, பாதக நிலைமையை ஆராய்வதற்கான களப் பயணம் மேற்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், கனியவளம், சுற்றுசூழல் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் களப் பயணத்தில் பங்கெடுத்தனர்.


இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் மணல் அகழ்வுக்கு சாதகமான நிலமை காணப்பட்டாலும், அந்த மணலை வெளியில் கொண்டு வந்து சேர்ப்பதற்கான வீதி சரியான முறையில் இல்லாத நிலமை கண்டறியப்பட்டது. எனவே பிரதேசத்தின் வீதிப் பிணக்குகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-13)

## வாரம் ஓர் ஆசனம்

# சுப்த வஜ்ராசனம்

(கணுக்கால்களின் மீது மல்லாந்து படுத்தல்)

○ ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)



இவ் ஆசனத்தின் உச்ச நிலையில் முதுகுப்பகுதி தரை மீது ஓய்வாக இருக்க வேண்டும்.

**செய்(படி)முறைகள்:**

1. வஜ்ராசனத்தில் உட்காரவும். (முன்னர் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி)
2. மெதுவாக பின்பக்கமாக சரியவும், சரியும் போது உடலின் முழுப்பாரமும் (முழங்) கைகளினால் தாங்கப்படட்டும். பின்னர் அப்படியே மல்லாந்து படுத்துக் கொள்ளவும். இரு கைகளையும் கூப்பியபடி தலைக்கு மேலாகவோ அல்லது நெஞ்சுப் பகுதியுடனோ வைக்கவும். உச்சநிலை இது இந்நிலையில் ஆழமாக 1 நிமிடம் வரை சுவாசிக்கலாம்.
3. பின்னர் கைகளை விடுவித்து இடக்காலையும் அதன்பின் வலக்காலையும் விடுவித்துக் கொண்டு ஆரம்ப நிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்.

**பலன்கள்:**

முதுகுத்தண்டு வலிமை பெறும். சுவாச நோய்கள் தீரும். வயிற்றுப்புற மற்றும் இடுப்புப்புற பகுதிகளிலுள்ள உறுப்புக்கள் உரம் பெறுகின்றன. கால் நரம்புகள், தொடைத் தசைகள் மற்றும் தசைநார்கள் தளர்வடைந்து வலிமை பெறுகின்றன. கணுக்கால்கள், முழங்கால்கள், முதுகுபகுதி என்பவற்றின் இயக்கத்தன்மை அதிகரிக்கும். மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகள் குணமாகும். பாதம், கணுக்கால்கள், தொடைகள், எலும்புகள், இடுப்புப் பகுதி என்பவை பலம் பெறுகின்றன.

குறிப்பு: இவ்வாசனத்தில் எவ்வளவு நேரமானாலும் இருக்கலாம். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.

தொடரும்...

## தேசிய நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 13

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க, கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே , சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ய-159)



## பெண்களை பாதுகாப்போம்; விழிப்புணர்வுச் சுவரொட்டிகள்

முல்லைத்தீவு,மார்ச் 13

பெண்களைப் பாதுகாக்க வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தால் "நுண்கடன் அரக்கர்களிடம் இருந்து பெண்களைப் பாதுகாப்போம், ஜனாதிபதி அவர்களே வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று தமிழ் மொழியிலும், சிங்கள மொழியிலும் எழுதப்பட்ட சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-19)



முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் வேம்படி நாகதம்பிரான் அறநெறிப்பாடசாலையை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் மற்றும் தென்னங்கன்றுகள் என்பவை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் ஆலய நிர்வாகத்தினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-222)



# சின்னக்கயல் குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 13

கிளிநொச்சி நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் கீழ் அமைந்துள்ள சின்னக்கயல் குஞ்சுக்குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவிக்கப்பட்டன.

நன்நீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தேசிய நன்னீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையால் நேற்றுமுன்தினம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

விரிவாக்கல் உத்தியோகத்தர் யா.விதுசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 16 ஆயிரம் மீன் குஞ்சுகள் இக் குளத்தில் விடப்பட்டன.

நிகழ்வில் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். (ஐ-13)



# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 'பாடசாலை மாணவர்களுக்கு எதிர்கால இலக்குகளுக்கான தயார்ப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவி தனுஷியாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 26 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ய-159)

# உலகம் முழுவதும் பட்டினிச்சாவு வரும்

## குத்தேரஸ் எச்சரிக்கை



**ஜெனிவா, மார்ச் 13**

**உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து உணவு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ஐக்கிய நாடுகள் சபைத் தலைவர் அன்டனியோ குத்தேரஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 'உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் உள்ளது. உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால் தீவிர பசி மற்றும் மரணத்தின் விழிம்பை அடைவார்கள். கொரோனா மற்றும் காலநிலை மாற்றம் வறுமையைத் தீவிரப்படுத்தியுள்ளது. நீங்கள் மக்களுக்கு உணவளிக்கவில்லை என்றால் மோதலை உருவாக்குகிறீர்கள் என்று அர்த்தம். பஞ்சமும், பசியும் உணவு இல்லாததால் ஏற்படவில்லை. இந்தப் பஞ்சமும் பசியும் மனிதனால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றன' - என்றார். (ம)



# நாங்கள் நிறவெறி கொண்ட குடும்பமாக இருந்ததில்லை!

## முன்னாள் இளவரசி மேகனின் குற்றச்சாட்டை மறுத்தார் பிரிட்டன் இளவரசர் வில்லியம்

லண்டன், மார்ச் 13

அரச குடும்பத்தினர் எனக்குப் பிறக்கும் குழந்தையின் நிறம் தொடர்பில் கவலைப்பட்டனர். என் குழந்தை கறுப்பாகப் பிறந்துவிட்டால் அவனுக்கு இளவரசர் பட்டமோ அல்லது பாதுகாப்போ கிடைக்கப்பெறாது என்று தெரிவித்தனர் என்று மேகன் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் அதற்கு இளவரசர் வில்லியம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து இளவரசர் ஹரி மற்றும் அவரது மனைவி மேகன் ஆகிய இருவரும் இங்கிலாந்து அரச குடும்பப் பதவிகளிலிருந்து விலகுகிறோம் என்று கடந்த ஆண்டு அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து அரச குடும்பத்தினருடன் ஆலோசனை நடந்தது. அவர்களின் முடிவுக்கு ராணி எலிசபெத் ஒப்புதல் வழங்கினார்.

இங்கிலாந்து இளவரசர் ஹரி, அவரின் மனைவி மேகன் இனிமேல் ஒருபோதும் பெருமைக்குரிய இளவரசர், இளவரசி பட்டங்களைப் பயன்படுத்த மாட்டார்கள். மக்களின் வரிப் பணத்தையும் பெற மாட்டார்கள் என்று பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்தது.

ஹரி - மேகன் மார்கல் அரச குடும்பத்திலிருந்து விலகியது குறித்துப் பல்வேறான கட்டுரைகளை பிரிட்டன் பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன. இவற்றுக்கெல்லாம் எந்தவித பதிலையும் தெரிவிக்காமல் ஹரியும் மேகனும் மவுனம் காத்து வந்தனர். இந்த நிலையில் அண்மையில், புகழ்பெற்ற தொலைக்காட்சித் தொகுப்பாளர் ஓப்ரா வின் ப்ரேவின் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இருவரும் மனம் திறந்து பேசியுள்ளனர்.

அதில் கருத்துத் தெரிவித்த ஆபிரிக்க அமெரிக்கரான மேகன் மார்கல், 'நான் கர்ப்பமாக இருந்த காலங்களில் என் மகன் பிறந்த பிறகு எவ்வளவு கறுப்பாக இருப்பானோ என்று அரச குடும்பத்தினர் கவலைப்பட்டனர். அவனுக்குப் பாதுகாப்பு வழங்கப்படாது, அவனுக்கு இளவரசர் பட்டம் சூட்டப்படாது' என்றெல்லாம் பேச்சுகள் எழுந்தன. நிறைய தடவைகள் இனி உயிர் வாழக்கூடாது என்று நினைத்திருக்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த நேர்காணல் இங்கிலாந்து அரச குடும்பத்தினர் மீது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில் இதற்கு இளவரசர் வில்லியம் பதிலளித்துள்ளார். மேகனின் குற்றச்சாட்டு குறித்து லண்டனில் பள்ளி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வில்லியமிடம் கேட்கப்பட்டது. அதற்கு வில்லியம் பதிலளிக்கும்போது, 'நாங்கள் நிறவெறி குடும்பம் அல்ல' என்று தெரிவித்துள்ளார். வேறு எந்தக் கருத்தும் இது தொடர்பாக அவர் தெரிவிக்கவில்லை. (ம)

# ஐவரி கோஸ்ட் பிரதமர் மறைவு

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டின் பிரதமர் ஹமேட் பக்காயோகோ மறைவுக்கு அதிபர் அலசேன் குவாட்டாரா இரங்கல் தெரிவித்துள்ளார். ஐவரி கோஸ்ட் நாட்டின் பிரதமராக இருந்து வந்தவர் ஹமேட் பக்காயோகோ (வயது 56). அங்கு ஏற்கனவே பிரதமராக இருந்து வந்த அமடோ கோன் கூலிபாலியின் திடீர் இறப்பைத் தொடர்ந்து, பக்காயோகோ அந்த நாட்டின் பிரதமராக கடந்த ஜூலை மாதம் 8ஆம் திகதி பதவியேற்றார். இந்த நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (ம)





கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்ஸிஸ் அண்மையில் ஈராக் நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் கடும் சேதத்தைச் சந்தித்த மோசூலில் அவர் வழிபாடுகளை மேற்கொண்டார். (ம)

# பாரிஸ் தேவாலயக் கூரைக்கு ஆயிரம் ஓக் மரங்கள் தெரிவு

பாரிஸ், மார்ச் 13

பாரிஸ் நகரின் புகழ் பெற்ற நொர்த்டாம் மாதா கோவிலின் கோபுரக் கூரையை மீள நிறுவுவதற்காக ஆயிரம் ஓக் மரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பல மரங்கள் நூறாண்டுகள் பழமை வாய்ந்த முதிர்ந்த மரங்கள் ஆகும்.

பிரான்ஸின் சகல பிராந்தியங்களிலும் உள்ள வனங்களில் இருந்து மரங்களை வழங்குவதற்குத் தனியார் வனவள உரிமையாளர்கள் பெரிதும் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. 'தங்கள் வாழ் நாளில் கிடைக்கமுடியாத அரியதோர் வரலாற்றுச் சந்தர்ப்பம் இது' என்று மரங்களை வழங்குவோர் அதனைப் பெருமைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த எட்டு மரங்கள் சார்த் என்ற இடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மரங்களைத் தறிக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

உயர்ந்த கூம்பு வடிவக் கூரையின் தீராந்திகள் முதல் சட்டப் பலகைகள் வரை முழுவதும் ஓக் மரங்களால் மட்டுமே வடிவமைக் கப்படவுள்ளன.

பாரிஸ் நகரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக நகர மையத்தில் நிமிர்ந்து நின்றிருந்த பெருமைக்குரிய 93 மீற்றர் உயரம் கொண்ட தேவாலயக் கூரையை இரண்டாண்டுகளுக்கு முன்னர் தீ முற்றாக விழுங்கியது. முழுவதும் ஓக் மரங்களால் வடிவமைக் கப்பட்டிருந்த 12ஆம் நூற்றாண்டுகாலக் கலை வடிவக் கூரை 2019 ஏப்ரலில் நிகழ்ந்த பெருந் தீயில் முற்றாக எரிந்து அழிந்தது.

கோபுரக் கூரை 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னராக அதன் முன்னைய வடிவத்திலேயே முழுவதும் மரங்களால் மீள நிர்மாணிக்கப்படும் என்று அதிபர் மக்ரோன் உறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் நாகேஸ்வரி

**தோற்றம் 22.09.1944** **மறைவு 12.03.2021**

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று (12.03.2021) வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், அரியராணி, அரியமலர், அப்பாப்பிள்ளை, அரியசோதி, அரியசுசி, அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாதசக்தி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கணேசலிங்கம் மற்றும், காந்தரூபி, பரமநாதன், ஆரியவிந்தன், கிருஷ்ணவேணி ஆகியோரின் மாமியாரும், லக்ஸ்ஷனி, சுதர்சன், அதீசன், சுஜித்தா, பவதீசன், கீதாஞ்ஜலி-றஜீத், விபுலன், அஸ்வந்தி, அர்ஷ்ஷாந், அவீசன், கஸ்தூரி, பவித்தாரி, அபிசனா, அபிஷாந், அபினாஷ், அஸ்நிகா ஆகியோரின் பேர்த்தியும், பிரதீஸ், டறிஸ், தக்ஷறா, ஜஸ்மிதா, மாதினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.03.2021) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


# காணாமலாக்கப்பட்டோரின் விவரம் கோரிப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 13
நாட்டில் இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சம உரிமை இயக்கத்தினரே இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். அவர்கள், "காணாமலாக்கப்பட்ட அனைவருடைய விவரங்களையும் வெளிப்படுத்து, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (தஇ)

# கல்வியைச் சீரமைக்க டிஜிட்டல் தளத் திட்டம்!

*கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு*



கொழும்பு, மார்ச் 13
கல்வி நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கான டிஜிட்டல் தள நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டின் கல்விக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்படவில்லை. பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்படுகின்றமை மாத்திரமன்றி, சிறப்பான கல்வியை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதும் அரசின் நோக்கம் என்று செயலாளர் தெரிவித்துள்ளார்.

புத்திஜீவிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழகத்தினர் மற்றும் பாடசாலை சமூகத்தினர், பொதுமக்கள், ஊடகவியலாளர் உட்பட அனைவருடைய ஆலோசனைகளும் இதற்காக பெறப்படவுள்ளன. இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-இ)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
### Procurement of Building Construction

1. The Chairman,Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from Interested bidders for the Construction work described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
5. Interested bidders may obtain further information from **Regional Director of Health Services office, 572/3 Hospital Road, Jaffna ( T.No: 021-2222278, FAX -021-2229971)** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services, Jaffna from 15/03/ 2021 until 26/03/ 2021 from 9.00 hrs to 15.00 hrs upon payment of non-refundable fees Rs.1,000.00.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on or before 10.00 Am hr On 29/03/2021.** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, **572/3 Hospital Road,** Jaffna on commencing at 02.30 P.M on 22.03.2021.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Minimum CIDA Grade Required | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2021/ PSDG/W/01 | Construction of OPD Block at KKS,Jaffna. | 9.614 | 130days | C 7 or C6 (Buildings) | 97,000.00 | Till 12.07.2021 |
| NP/04/41/2021/P SSP/W/01 | Construction of OPD Block at Innuvil, Jaffna. | 9.258 | 128days | C 7 or C6 (Buildings) | 93,000.00 | Till 12.07.2021 |
| NP/04/41/2021/P SSP/W/02 | Construction of Male and Female Ward (Stage II) at DH Ilavalai,Jaffna. | 8.336 | 123days | C 7 or C6 (Buildings) | 84,000.00 | Till 12.07.2021 |
| NP/04/41/2021/P SSP/W/03 | Construction of Ambulance Garage at BH Kayts,Jaffna. | 3.426 | 92days | C 8 or C7 (Buildings) | 35,000.00 | Till 28.06.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Office of Regional Director of Health Services,**
**Jaffna.**

## மரண அறிவித்தல்

**தோற்றம் 10 . 04 . 1945**



**மறைவு 27 . 02 . 2021**

### திருமதி தங்கராணி சிவானந்தம்

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராணி சிவானந்தம் கடந்த 27.02.2021 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை ஊரிக்காடு நிறுவைத்தம்பையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊரிக்காடு பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

தகவல்:
+94777684131 குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 11 . 1932



மறைவு 23 . 02 . 2020

### அமரர் நாகமுத்து இரத்தினம் (தம்பித்துரை மாஸ்ரர்)

**(இளைப்பாறிய உடற்கல்வி (P.T.I) ஆசிரியர்)**

**திதி: - அமாவாசை (13.03.2021 சனிக்கிழமை)**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எங்களை
வானுயர பெயர்விளங்க வைத்த எங்கள்
அன்புத் தெய்வம் அப்பா! நீங்கள்
இறைவனடி சேர்ந்து ஓராண்டு கடந்து
விட்டாலும் நீங்கள் எம்முன் நிற்கின்றீர்கள்
நீங்கள் எங்களைப் பிரிந்தாலும்
எங்கள் ஒவ்வொரு அசைவிலும் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மாவின் சாந்திக்கு எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**யாழ்-அச்சுவேலி பிரதானவீதி,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

# பள்ளத்தில் பாய்ந்தது பஸ் 27 பேர் பரிதாப உயிரிழப்பு

## இந்தோனேசியாவில் துயரம்

யகார்தா, மார்ச் 13



இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பேருந்து விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவா மாகாணத்தில் சுபாங் என்ற இடத்தில் ஓர் இஸ்லாமியப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளியின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் டாசிக்மலாயா மாவட்டத்தில் உள்ள புனித தலத்துக்குச் சென்று திரும்புகையிலேயே மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்து 20 அடி பள்ளத்தில் பஸ் கவிந்ததாலேயே இவ் உயிரிழப்புக்கள் சம்பவித்துள்ளன என்று இந்தோனேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

(ம)

# பல்கலை.வேந்தரின் பேருரை இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும், மூத்த பேராசிரியருமான கலாநிதி சி.பத்மநாதனின் பேருரை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

'ஆதி இலங்கையில் இந்து சமயம்' என்னும் தலைப்பில் அவர் உரையாற்றவுள்ளார். இதில் ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ற-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 05 . 1943



இறப்பு 12 . 03 . 2021

### திருமதி மேரிலூட்ஸ் அன்ரன் பாலசிங்கம் (ராஜவதி)

இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜவதி என்று அழைக்கப்படும் திருமதி மேரிலூட்ஸ் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று (12.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிஜயா மேரிதிரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அன்ரன் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி) அவர்களின் அன்பு மனைவியும், ரஞ்சிதம் (பிரான்ஸ்), ராணி (சுவிஸ்), பிலிப் ராஜநாயகம், பவி (கனடா), ஜெயா, வசந்தா (பிரான்ஸ்), சாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜோச், அன்ரன், நிர்மலாதேவி, ஜோசேப், ராயு மற்றும் கிறகரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மச்சாளும், காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம், துரைசிங்கம் மற்றும் பற்றிமா, இராஜகுலசிங்கம், நீற்றா மரியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதி ஆராதனை திருப்பலிக்காக பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து 15.03.2021 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கணவர்**
**அன்ரன் பாலசிங்கம்**
**(ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி)**
**தொடர்பு இல: 071 860 9153**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 07 . 1966



மறைவு 12 . 03 . 2021

### திரு.சுகிர்தநாயகம் சுரேந்திரன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும். சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சு.சுரேந்திரன் அவர்கள் 12.03.2021 அன்று காலையில் இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சுகிர்தநாயகம் நகுலேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தவமணியின் மருமகனும், கலாரஞ்சியின் அன்புக் கணவரும், சு.கபிலன் (யா/இந்துக் கல்லூரி 2019 A/L) அன்புத் தந்தையும், சுகிர்தாஈஸ்வரி (சுவிஸ்), கேதீஸ்வரி (சுவிஸ்), திருச்செல்வம் (கட்டார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரன் (சுவிஸ்), பாலஸ்கந்தன் (சுவிஸ்), சர்மிளா, கலாநிதி, கலாநாதன், கலாமோகன் ஆகியோரின் மைத்துனரும், பவித்திரா (சுவிஸ்), மாலவன் (சுவிஸ்), செந்தூர் (சுவிஸ்), செந்துஜன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், வேனுசன், அஸ்விதன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தையடி முன் ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**074 042 1567 - மகன்.**

# 31ஆம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 16 - 02 - 1932

மறைவு 11 - 02 - 2021

## அமரர் கந்தவனம் ஆறுப்பிள்ளை

கடந்த 11.02.2021 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குல தெய்வம் அமரர் கந்தவனம் ஆறுப்பிள்ளை அவர்களின் அந்தி யேட்டிக்கிரியைகள் இன்று (13.03.2021) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிலும்பிலாசிட்டி
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்

குடும்பத்தினர்
077 614 3582

## G.C.E (A/L) 2022

PHYSICS - BY S.வர்ணம்
Zoom Class 5.05 am - 6.10 am
HEAT ஆரம்பம் : 15.03.2021
A/L- 2023 29.03.2021
077 749 2308

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 32. உயரம் 5.9, அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகக் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

077 537 5472

## பெயர் மாற்றம்

நுணாவில் மத்தி, கத்தாப்படி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த **சின்னத்துரை அன்பழகு** ஆகிய நான் எனது பெயரை **சின்னத்துரை வசுமதி** என மாற்றம் செய்து இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங் களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**சின்னத்துரை வசுமதி**

## நல்லூர்க்கந்தன் திருமணசேவை

அரசபணி, தனியார் நிறுவனம், உள்நாடு, வெளிநாடு எல்லாவித மணமக்களுக்கும் ஏற்ற வரன்கள் எம்மிடம் உண்டு.

தொடர்பு:0779733183 வி.ஜெயந்தி

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983கார்த்திகை 4ம் பாதம் 12 செவ் 35 கிரகபாவம் கொண்ட அரச உத்தியோகம் உடைய சைவபோசன மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு 076 639 7906


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

1) மேசன் - 1800/-
2) மேசன் உதவியாளர் - 1300/-

தொடர்பு 074 002 9658
8.30 Am - 6.00 Pm தொடர்பு கொள்ளவும்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 10.02.1971

ஆண்டவன் அடியில் 13.03.2017

## திரு. தவரட்ணம் மகிமராஜா (ராசன்)

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
- என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும்
- வாழ்வார்
நித்திய இளைப்பாற்றினை அளித்தருளும்
- ஆண்டவரே
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல்
- பிரகாசிக்கக்கடவது

58,அம்மன் வீதி
கொக்குவில் கிழக்கு,

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி - சிவகனி
மகன் - சரண்ஜன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.04.1979

மறைவு 11.02.2021

கடந்த 11.02.2021 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

## சிங்கராசா ஜெகன்

(பரிமளா ஸ்ரோர்ஸ் மற்றும்
J.J கிரேசர் உரிமையாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.03.2021) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை

குடும்பத்தினர்

## பொதுக் கூட்டம் பிற்போடல்

வேலணை,மார்ச் 13

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொரோனாத் தொற்றுக் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருந்த பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிவராத்திரி வழிபாடு



வவுனியா கோவில்குளம் அகிலாண்டேசுவரர் ஆலயத்தில் மகாசிவராத்திரியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இரவு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. சிவராத்திரி பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சிவ தீட்சை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இதேவேளை, சுகாதார நடைமுறைகளைக் கண்காணிக்கும் வகையில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரும், சுகாதாரப் பகுதியினரும் ஈடுபட்டிருந்தனர். (ஐ-18)

## சேவை நலன் பாராட்டு

### திரு.கந்தையா ஆறுமுகம்



யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் கல்வி சாரா ஊழியராக கடமையாற்றி 11.03.2021 அன்று ஓய்வு பெற்று மணிவிழாக்காணும் திரு. கந்தையா ஆறுமுகம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

# 2023 A/L CHEMISTRY

By: திரு.K.மயூரன்

MON,TUE,WED,THU
7.30-9.30

**ஆரம்பம்: 15.03.2021**
**MONDAY : 7.30 AM**

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் பணியாற்றும் **ஜே. ஜெறாட் றெறன்ஸ்** அவர்களின் அன்பு மாமனார்

**குருசுமுத்து விக்டர் இமானுவேல்**

அவர்கள் 09.03.2021 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர் நலன்புரிச்சங்கம்
அரசினர் சித்தபோதனாவைத்திசாலை, கைதடி

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி,ஆனைக்கோட்டை
077 868 9500

## வேலையாட்கள் தேவை

**சுரேஸ் மோட்டோர்ஸ் அன் எஞ்சினியரிங்**

1) வரவேற்பாளர் பெண்கள் (சம்பளம் 20, 000 இற்கு மேல்)
2) உதிரிப்பாக விற்பனையாளர் பெண்கள்
3) மெக்கானிக் வேலைகள் தெரிந்தவர்கள் இருபாலாரும்
4) பழக விரும்புபவர்கள் இருபாலாரும்.
5) பெயிண்டிங் வேலை தெரிந்தவர்கள்.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**
**EPF, ETF வசதி செய்து கொடுக்கப்படும்.**

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி

தொடர்பு
077 706 4110

## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2021

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஒரு பகுதி கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக் கப்பட்டுள்ளது.

02. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளுக் காக கோருகின்றார்.

03. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

06. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

07. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 15.03.2021 ஆம் திகதியிலிருந்து 29.03.2021 ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VAT நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

08. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 29.03.2021 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக் கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 22.03.2021 ஆம் திகதியன்று பிற்பகல் 14.30 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG/ W/01/2021 | Construction of Karanthai Kudijiruppu Road 01. | 5.4 Mn | 60 நாட்கள் | C7 and C6 (வீதி) | 100,000.00 | 12.07.2021 |
| NP/14/45(3)/PL/PSDG/ W/02/2021 | Renovation of Dumping Ground Access Road at Araththinagar | 2.19 Mn | 60 நாட்கள் | C8 and C7 (வீதி) | 40,000.00 | 28.06.2021 |
| NP/14/45(3)/PL/PSDG/ W/03/2021 | Construction of Open Dug Well at Iththavil | 0.453 Mn | 30 நாட்கள் | C9 and C8 (கட்டுமானம்) | 9,000.00 | 14.06.2021 |

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

03.03.2021

## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 23.04.1940
வேரக்கோனியான் அடியில் 06.03.2019

அமரர்
**பேரம்பலம் நடசேபிள்ளை**

காலனவன் வஞ்சித்து ஈராண்டு கடந்த தப்பா
ஆறாத்துயரில் நாங்களின்றும்
வாழ்வின் ஒளி விளக்காய் இருந்தீரகளே
விறகெரித்து அனுப்பி விட்டோம் - உம்மை
வேதனையில் துடிக்கிறது நெஞ்சமின்னும்
எம்முடன் வாழ்ந்த உம்மை காலனவன்
வென்று விட்டான்
எனினும் எம் மனவானில் என்றும்
விடிவெள்ளியாய் வீற்றிருப்பீர்கள் அப்பா!!

"நாக பவனம்"
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

வலிசுமக்கும் நெஞ்சுடன்
குடும்பத்தினர்

# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

# 2023 A/L

## கணித, உயிரியல் பிரிவு

நேரடி வகுப்புக்கள், நிகழ் நிலை வகுப்புக்கள்

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S.சோதிலிங்கம் | MR.S. SOTHILINGAM |
| திரு.M.குகனேஸ்வரன் | MR.M. KUGANESWARAN |
| திரு.G.பிரபா | |
| திரு.N.கபிலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| MR.G.BENO | MR.G.BENO |
| MR.T.சுசாந்தன் | MR.S.V.SELVARANJAN |
| MR.S.T.உமாசங்கர் | |
| MR.K.சிவத்திரன் (நிகழ்நிலை வகுப்பு) | |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு.T.கெங்காதரன் | MR.V.S.GUNASEELAN |
| திரு.V.S.குணசீலன் | MR.S.P.NAGANATHAN |
| திரு.K.ராகவன் | |
| திரு.S.P.நாகநாதன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு.P.செந்தில்நாதன் | MR.P.SENTHILNATHAN |
| திரு.S.சிவகரன் | MR.S.SIVAKARAN |

**ஆரம்பம்: 14.03.2021**

ஞாயிற்றுக்கிழமை 09.30 A.M

தொடர்பு :0777 917611, 076 569 3006

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 07 . 1936

மறைவு 12 . 03 . 2021

### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், நீர்வேலி வலிகிழக்கு, தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவரும், கற்பகப்பிள்ளையார் கோவில் திருப்பணிச்சபை முன்னாள் தலைவரும்)**

இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (12.03.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பறுவதம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லிங்கதாசன் (கனடா), சக்திநேசன் (கனடா), லிங்ககௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோஜா (கனடா), லோகினி (கனடா), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், பிரவீனா, பிரணவன், பூஜா, கல்கி, துளசி ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, சிவபாக்கியம், இரத்தினேஸ்வரி மற்றும் சோமசுந்தரலிங்கம், மகேந்திரராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும், சேனாதிராஜா, ஜெயானந்தன், ஜெயராஜா காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் செக்கடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஜெயராஜா (தயா)**
**021 223 1301**

**கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,**
**இருபாலை, கோப்பாய் தெற்கு.**

## பதிவுசெய்யவேண்டும்

முல்லைத்தீவு, மார்ச் 13

சிறுவர் நலமேம்பாட்டுக் குழுவை சட்டரீதியாக பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சுவந்தினி சிவஞானராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சபையில் நேற்று நடைபெற்ற அமர்வில், அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். (து-13)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

### 108A, பெரியதம்பிரான் கோயில் ஒழுங்கை, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் - 06 பெரியதம்பிரான் கோயில் ஒழுங்கையிலுள்ள இல: 108A. ஆகிய ஆதனம் எனது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் கந்தர் மாரிமுத்து என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனம் சண்முகம் கருணாகரனும். **சண்முகம் லோகேஸ்வரனும், கருப்பையா நாகராசா லக்ஸ்மனும் பெண் ஜானகியும், சண்முகம் கிருபாகரனும்** ஆகியவர்கள் தங்களில் 1ம். 2ம். 4ம். 5ம் பேர்களின் பூட்டனாகிய கந்தர் மாரிமுத்துவின் முதுசமாக இருந்தது என்றும், அவரது பெயரில் உறுதி இருந்தது என்றும். குறித்த உறுதி இடப்பெயர்வின் போது தொலைந்துவிட்டது என்றும், அதை எடுப்பதற்கு பலவித முயற்சிகள் மேற் கொண்டும் எடுக்க முடியவில்லை என்றும். மாரிமுத்து இறக்கும் வரை அவ் ஆதனத்தை அவரே பாரா மரித்து வந்தார் என்றும். அவரது பிள்ளைகள் யாரிற்கும் சாதனம் செய்து கையளிக்கவில்லை என்றும். அவரது இரு பிள்ளைகளில் ஒரு பிள்ளையாகிய பெண் பிள்ளைக்கு வேறு ஆதனத்தை சீதனமாகக் கொடுத்தார் என்றும். ஆதலால் அவரின் ஏக புத்திரனும் தங்களின் பேரனுமாகிய மாரிமுத்து சிவசம்பு விற்கு இவ்வாதனம் பிதாவழி முதுசமாக வந்தது என்றும் அவரும் எவ்வித சாதனமும் செய்யாது இறந்துவிட அவரது ஏகபுத்திரனாகிய தமது தந்தையாகிய சண்முகத்திற்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் தமது தந்தை யாரும் எவ்வித சாதனமும் செய்யாது இறந்துவிட அவரது பிள்ளைகளாகிய தம்மை வந்தடைந்ததென்றும் குறித்த ஆதனம் இற்றைக்கு 30 வருடங்களுக்கு மேலாக எவ்வித இடையூறுமின்றி தம்மால் ஆட்சிசெய்யப்பட்டு வருகின்றது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 9026/24.11.2012 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி யொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

**சண்முகம் கைம்பெண் செல்வராணி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9027/24.11.2012ஆம் இலக்க உறுதியால் குறித்த **சண்முகம் கருணாகரனும், சண்முகம் லோகேஸ்வரனும், கருப்பையா நாகராசா லக்ஸ்மனும் பெண் ஜானகியும், சண்முகம் கிருபாகரனும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியை **சண்முகம் கருணாகரன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9028/24.11.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த . **சண்முகம் கைம்பெண் செல்வராணி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாக பெற்று மீண்டும் சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சண்முகம் கருணாகரன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சண்முகம் கருணாகரன்** ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர் / செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

## மரண அறிவித்தல்



### வனசாட்சி தேவதாசன்

**(முன்னாள் ஆசிரியை)**

**தோற்றம்** 19.05.1931 **மறைவு** 12.03.2021

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வனசாட்சி தேவதாசன் (முன்னாள் ஆசிரியை) நேற்று (12.03.2021) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிளறிக்கல் முத்தையா என அன்பாக அழைக்கப்பட்ட முத்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தேவதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கமலாசனி, பத்மாசனி, Dr.சதானந்தன், நிலோசனி, தவமணி மற்றும் யோகநந்தன் (பிரான்ஸ்), Dr. கணேசானந்தன் (USA) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரஞ்சனி (பிரான்ஸ்), நந்தினி (UK), மாலினி (UK), அருணன் (UK), குமுதினி (மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்), மதிவாணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரன் (பிரான்ஸ்), கோபிநாத் (UK), சிவகாந்தன் (UK), வாசுகி (UK), வசந்தரூபா (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம், அறிவியல் நகர்), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கனகலிங்கம், இராசாம்பாள், பவானலட்சுமி, சிவலிங்கம் மற்றும் குணவதி, பாலசிங்கம் காலஞ்சென்றவர்களான Dr.கனகசிங்கம், இராசையா மற்றும் யாசா (பிரான்ஸ்), யோகா (USA) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.79, ஆனந்தன் வடலி (A.V) றோட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**தொ.பேசி: 077 989 3757, 077 124 9032**

## தமிழர்களுக்கு....

தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் நடந்தேறிய இன அழிப்புக்கு நீதி கோரி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வு நடைபெறும் இந்தக் காலப் பகுதியில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதகுருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்புக்கள் இணைந்து தற்போது பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் எதிர்வரும் 18ஆம் திகதி சமர்ப்பிக்கப் படவுள்ள நிலையில், அதன் மீதான வாக்கெடுப்புக் காலப்பகுதியில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணி, தற்போது உணவு தவிர்ப்பு போராட்டம் நடைபெறும் போராட்ட களத்தில் நிறைவடையவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்களுடன் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர்.

மதகுருக்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்து தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டும் என்று வடக்கு, கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் கோரியுள்ளனர். (எ-இ)

## திடீர்...

நேற்று நடந்துள்ளது. சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சுகிர்தநாயகம் சுரேந்திரன் (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கூழாவடிப் பகுதியில் சைக்கிளில் சென்றபோது தலைசுற்றுகிறது எனத் தெரிவித்து அங்குள்ள கடை ஒன்றில் நின்று ஆசுவாசப்படுத்தியுள்ளார். அதன் பின்னர் வீட்டுக்குச் சென்றபோதும், அவருக்கு தலைசுற்றல் காணப்பட்டதை அடுத்து வீட்டில் இருந்தவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுச் சோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26,25)

## சைக்கிளிலிருந்து...

சைக்கிளின் பின்னிருக்கையில் இருந்து பயணித்த இவர், அல்லைப்பிட்டிக்கு அண்மையில் தவறிக் கீழே விழுந்து மயக்கமடைந்தார். அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் நேற்று மேற்கொண்டார். (எ-26,25)

## மோ.சைக்கிள்...

த்துரை சுதந்திரன் (வயது-46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 26ஆம் திகதி வீதியால் வந்த போது, பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதியது. அதில் காயமடைந்த இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் நேற்று மேற்கொண்டார். (எ-26,25)

## வலிப்பு....

வீட்டில் இருந்தபோது இவருக்குத் திடீரென வலிப்பு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து உறவினர்கள் அவரை செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும் சிகிச்சை பயனழிக்காது நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-18)

## கனதியாகவே...

ஆனால், இந்த வரைவு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மான வரைவு திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள சூழலில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளே அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அந்த வரைவை நிறைவேற்ற உறுப்பு நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் அனுப்பிய கடிதம் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அரச படைகளால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரங்கள் ஆகியவற்றுக்குத் தீர்வு காணும் வகையில் ஐ.நா. பிரேரணையின் புதிய வரைவில் பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணைக்கு பல நாடுகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. பல நாடுகளின் தூதுவர்களுடன் நாம் பேச்சுக்களை நடத்தி பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறும் கோரியுள்ளோம்.

அதேவேளை, பிரேரணைக்கு ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைக் கோரி பகிரங்க அறிக்கையொன்றையும் நாம் வெளியிட்டுள்ளோம்.

எனவே, இந்த வரைவு உறுப்புரிமை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியே தீரும். இது எமது அசைக்க முடியாத நம்பிக்கை, என்றார். (ஒ-5,22)

## அபாய....

பொதுமக்கள் அனைவரும் தேவையற்ற ஒன்றுகூடல்கள், விழாக்கள் மற்றும் பயணங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றாது விட்டால் கொரோனாத் தொற்று நிலைமை அபாய நிலையை அடையும் என்று அஞ்சப்படுகின்றது.

தீவிரமடையும் கொரோனாத் தொற்று நிலைமையை அடுத்து நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் சில நடைமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலர் ஒன்றுகூடும் வகையில் நடத்தப்படும் எந்த நிகழ்வும் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதி பெற்றே நடத்தப்பட வேண்டும். அனுமதி பெற்று நடத்தப்படும் நிகழ்வுகளில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள விதிமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும். அவற்றை மீறுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமண்டபங்களில் நடத்தப்படும் திருமணங்களில் ஆகக்கூடியது 150 பேர் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். வீடுகளில் நடத்தப்படும் திருமண நிகழ்வுகளில் 50 பேருக்கு மேல் கலந்துகொள்ளக் கூடாது.

அதேவேளை, இறுதிச் சடங்குகள் (கொரோனா அல்லாத உயிரிழப்புக்கள்) ஆகக் கூடியது 50 பேருடன் 24 மணிநேரத்துக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும். இறுதிச் சடங்குகளில் வெளிமாவட்டத்திலிருந்து வருவோர் பங்குபற்றுவதை இயன்றளவு தவிர்க்கவும். பிறந்தநாள் கொண்டாட்டங்கள், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களுடன் மட்டும் வீட்டில் நடத்தப்பட வேண்டும். மண்டபங்களில் இந்த விழாக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது.

பொதுக்கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்கள் சுகாதார மருத்துவ அதிகாரியின் முன் அனுமதியுடன் 150 பேருக்கு மேற்படாது நடத்த முடியும். நிகழ்வில் பங்குபற்றுவோர் விவரம் சுகாதார மருத்துவ அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

திருவிழாக்கள், வழிபாடுகளில் 50 பேர் மட்டுமே ஒரு நேரத்தில் கலந்துகொள்ள முடியும். அன்னதானம் மற்றும் தண்ணீர் பந்தல்கள் போன்றவை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது.

பாடசாலை மற்றும் பிரதேச செயலகங்களால் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பார்வையாளர்களுடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். வேறு எந்தக் கேளிக்கை நிகழ்வுகளுக்கும் அனுமதி வழங்கப்படாது.

பாடசாலைகளில் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். தனியார் நிறுவனங்களில் மாணவர் இடையே தனிநபர் இடைவெளியைப் பேணுவது உரிமையாளர்களின் பொறுப்பாகும்.

பொதுப் போக்குவரத்தில் பயணிப்போர் கட்டாயம் முழுநேரமும் சரியான முறையில் முகக்கவசம் அணிவது கட்டாயம். இயன்றளவு தனிநபர் இடைவெளியைப் பேண வேண்டும். பயண முடிவில் கைகளை முறைப்படி கழுவுதல், தொற்று நீக்கியைப் பயன்படுத்தி கைகளைச் சுத்தம் செய்தல் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதுடன், இயன்றளவு தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவல் அபாயமுள்ள இடங்களான சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் கொரோனாத் தடுப்பு விதிமுறைகள் புறக்கணிக்கப்படுவது தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சந்தைக் குத்தகைக்காரர்கள் மற்றும் நுகர்வோர் சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் -என்றார். (எ-இ)

## வடக்கு...

ணம் போதனா மருத்துவமனைக்குச் சென்ற இருவருக்கும், முல்லைத்தீவில் 3 பேருக்கும், மன்னாரில் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் மீன் சந்தையில் 19 பேருக்கு எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து, முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ள்ளன.

மன்னாரில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் ஆலயம் ஒன்றில் சிவராத்திரி தினம் அன்று கடை அமைக்கச் சென்றவர். இவர் மன்னார் நகரப் பகுதியைச் சேர்ந்தவர். மற்றையவர் வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபடுபவர். இவர்களுடன் தொடர்புகளைக் கண்டறியும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்க ப்பட்டுள்ளன. (எ-26)

## சுப்பர்மடத்தில்...

அங்கிருந்த பொருள்களை அடித்து உடைத்ததுடன், தீயும் வைத்துள்ளது. வீட்டில் வளர்க்கப்பட்ட புறாக்களை அந்தக் கும்பல் அடித்துக் கொன்றுள்ளதுடன், வளர்ப்பு நாயையும் வெட்டிக் கொன்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. வீட்டிலிருந்தவர்கள் கோயிலுக்குச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வீட்டில் இருந்த பொருள்களை அழுத்து நொருக்கியதுடன், தொலைக்காட்சியை வீதியில் கொண்டுவந்து உடைத்து நொருக்கியுள்ளது அந்தக் கும்பல். வீட்டுக்குத் தீ வைக்கவும் முயன்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை, சுப்பர்மடத்தில் நேற்று முன்தினம் வீதியோரம் உள்ள கொட்டகையில் உறங்கிய இளைஞர் ஒருவர் மீது மூவர் கொண்ட குழு இரும்புக் கம்பிகளால் தாக்கியிருந்தது. இந்தச் சம்பவங்களால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். (எ-26)

## ரயிலுடன்...

ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயிலுடன், கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் உள்ள ரயில் கடவையில் கடக்க முயன்ற ஒருவர் மோதுண்டுள்ளார்.

கிளிநொச்சி 5ஆம் வாய்க்காலைச் சேர்ந்த கி.ரவிச்சந்திரன் (வயது-34) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இவரது கால் ஒன்று துண்டிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-12)

# திட்டமிட்டபடி ஜூலை மாதம் ஒலிம்பிக் நடக்கும்

**டோக்கியோ, மார்ச் 13**

**கொரோனா கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டாலும், திட்டமிட்டபடி ஜூலை மாதம் ஒலிம்பிக் தொடர் நடைபெறும் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் தோமஸ் பெச் அறிவித்தார்.**



உலகின் பழைமையான விளையாட்டுத் தொடராகக் கருதப்படும் ஒலிம்பிக் தொடர் கடந்த வருடம் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறுவதாக இருந்தது. எனினும் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடந்த வருடம் தொடரை நடத்த பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. குறிப்பாக தொடர் நடத்தப்பட்டால் அதிலிருந்து விலகுகின்றோம் என்று கனடா அறிவித்தது. இதையடுத்து ஓர் ஆண்டுக்கு ஒலிம்பிக் ஒத்திவைக்கப்பட்டது. இந்த வருடமும் கொரோனாத் தொற்று நீடிப்பதால் தொடர் நடைபெறுமா என்பது சந்தேகமாகவே உள்ள நிலையில், 'திட்டமிட்டபடி டோக்கியோ ஒலிம்பிக் நடைபெறும்' என்று அறிவித்துள்ளார் தோமஸ் பெச்.

அதேநேரம் ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் பதவிக்கு பெச் தொடரலாமா இல்லையா? என்பது தொடர்பான நம்பிக்கை வாக்கெடுப்பும் அண்மையில் நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் 93:1 என்ற அடிப்படையில் பெச் வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# டெஸ்ட் தலைமைத்துவம் ஹோல்டரிடமிருந்து பறிப்பு!

ஜமைக்கா, மார்ச் 13



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தலைவராகச் செயற்பட்ட ஜேசன் ஹோல்டரிடம் இருந்து டெஸ்ட் தலைமைத்துவமும் பறிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் அணிக்கு தலைவராக இருந்த தினேஷ் ரம்டின் சென்றபின், அவருக்குப் பதிலாக ஹோல்டர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதுவரை 37 டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தலைவராக ஹோல்டர் பணியாற்றியுள்ளார். அதில் 11 வெற்றிகள், 5 சமநிலைகள், 21 தோல்விகளை சந்தித்துள்ளார். தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் ஆட்டங்களுக்கான சகலதுறை வீரர்களின் பட்டியலில் ஹோல்டர் முதலிடத்தில் உள்ளார். ஆனால் அணிக்கு வீரர்களை ஒருங்கிணைக்க ஹோல்டர் தவறுகின்றார் என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டது.

சமீபத்தில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு பிராத்வெய்ட் கேப்டனாகப் பொறுப்பேற்று 2:0 என்ற கணக்கில் தொடரை வென்றார். உடல்நிலை காரணமாக இந்தத் தொடரில் ஹோல்டர் பங்கேற்கவில்லை. இந்த தொடரில் பிராத்வெய்ட் சிறப்பாகச் செயல்பட்டதையடுத்து, முழுநேரக் கேப்டனாக பிராத்வெய்ட் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# ரி-20 உலகக்கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றும்

## பட்லர் நம்பிக்கை



லண்டன், மார்ச் 13

அடுத்த ரி20 உலகக்கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்ற வாய்ப்புக்கள் உள்ளன. அந்த அணி அனைத்துத் துறைகளிலும் பலம்பெற்றுள்ளது – என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் அதிரடி வீரரான பட்லர்.

இது தொடர்பில் பட்லர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய இந்திய அணி மிகமிக வலுவானதாக உள்ளது. அந்த அணி ரி20 உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றுவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் உள்ளதாகவே கருதுகின்றேன். ஐ.பி.எல். தொடர் இந்திய அணியை அடுத்த கட்டத்தை நோக்கிச் செலுத்தியுள்ளது. எனினும் இங்கிலாந்து அணியும் குறைந்த அணியல்ல. நிச்சயம் நாமும் எந்தவொரு அணிக்கும் சிம்மசொப்பனமாக இருப்போம் என்றார். (ம)

**உடனடி வேலைவாய்ப்பு**
வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள சுத்திகரிப்பாளர் (Cleaner) தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாத சம்பளமாக 25000/- மேல் பெறலாம். தனியார்/ சேவை நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:
077 212 3486, 070 613 6136

**சோ (F) பா கிளீனிங்**
கரைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்கள் நவீன இயந்திரம் மூலம் கிளீன் செய்ய அழையுங்கள்
077 224 2787

**வீடு வாடகைக்கு தேவை**
Guest House நடத்துவதற்கு இணைந்த குளியலறைகளுடன் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு 077 285 0821

**காணி விற்பனைக்கு**
தொண்டைமனாற்றில் இருந்து வல்வெட்டித்துறை செல்லும் கடற்கரை வீதியில் 21 பரப்புக் காணி (வீதியில் இருந்து இரண்டாவது காணி) விற்பனைக்குண்டு.
தொடர்பு 077 123 5942

**காணி விற்பனைக்கு**
நல்லூர் செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 4 பரப்புக் காணி (மெயின் றோட்டில்) விற்பனைக்கு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
077 288 0152
077 623 4204
077 505 8561

**விஸ்டம்**
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
14.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2023
தொழினுட்பப்பிரிவு
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ICT, கணிதம்(7), விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
077 248 7774 , 076 552 9093, 021 221 7860

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2023, A/L 2021
Day Class
தொழினுட்பபிரிவு ஆரம்பம்
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி
⇒ பொறியியல் தொழினுட்பம்
⇒ தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
⇒ உயிர்முறைமைகள் தொழினுட்பம்
077 017 5346



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.